S. Nada
Publisher

விலை சதம் 5

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்.
"சுதந்திரன்"
194 A தட்டாரத் தெரு. கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும்
சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா „ 12-00
1 வருடச் சந்தா „ 24-00
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு. கொழும்பு

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

Phone. 3411
நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ஹு கார்த்திகை ௴ 16வ திங்கட்கிழமை Colombo December 1 1947 ஹிஜ்ரி 1367 முஹர்ரம் பிறை 17 | இதழ் 181

யுத்த நிறுத்த சமரஸக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது

பேச்சுவார்த்தையில் டச்சு அதிகாரிகள் அதிருப்தி

ஐ. நா. ஸ்தாபனத்துக்கு இந்தோனேஷிய குடியரசின் மூன்று வேண்டுகோள்கள்

பட்டேவியா, நவ. 29

இந்தோனேஷியாவில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு இந்தோனேஷிய குடியரசு அதிகாரிகளுடன் டச்சு அதிகாரிகள் பேச்சுவார்த்தைகள் நடத்தி வந்தனர். இப்பேச்சுவார்த்தைகள் டச்சு அதிகாரிகளுக்கு அதிருப்தியை அளித்துள்ளதாக அறியப்படுகிறது.

கடந்த ஜூலை மாதத்தில் டச்சு போலிஸ் நடவடிக்கை காரணமாக ஏற்பட்ட யுத்தத்தினை பாதுகாப்பு சபை தலையிட்டு நிறுத்தியிருந்தது. இப்பொழுது இப்பாதுகாப்புச் சபையின் ஆதரவுடன் இருநாடுகளின் பிரதிநிதிகளும் சந்தித்து ஒப்பந்தம் செய்துகொள்வதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இன்று நடப்பதாக இருந்த இக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. குடியரசு தலைநகரான ஜோக்ஜகர்த்தாவில் இருந்து குடியரசுத் தலைவர்களை ஏற்றிவர அமெரிக்க ஆஸ்திரேலிய விமானங்கள் கிடைக்கவில்லையென்றும் இதனால்தான் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது.

சமரஸப் பேச்சும் ஒத்திவைக்கப்படலாம்

அடுத்த செவ்வாய்க்கிழமை இங்கு வருமென எதிர்பார்க்கப்படும் அமெரிக்க கடற்படை கப்பலான "ரென்வில்லே"யில் அடுத்த வாரம் டச்சு-இந்தோனேஷிய பொதுச் சமரஸம்பற்றிய பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுமென்றும் இந்த நடவடிக்கை இப்பொழுது யுத்தநிறுத்தப் பேச்சுவார்த்தை சம்பந்தமான கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதால் பிற்போடப்படக்கூடுமென்றும் இங்கு பேசிக்கொள்ளப்படுகிறது. யுத்தநிறுத்த உடன்படிக்கை முடியுமுன் இந்த பொது சமரஸப் பேச்சுவார்த்தைகளால் பயன் இருக்க மாட்டாதென டச்சு வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

விபத்தில் இறந்த இந்தோனேஷியர்

விசாரணை செய்ய கமிட்டி நியமனம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை ரயிலில் ஏற்றிச் செல்லப்பட்ட 46 இந்தோனேஷிய கைதிகள் இறந்தது சம்பந்தமாக விசாரணை நடத்த சுரபாயாவிலுள்ள டச்சு கடற்படை பகுதி தளபதி ஒரு கமிட்டியை நியமித்துள்ளாரென்று டச்சு கிழக்கிந்திய அரசாங்கம் இன்று அறிவித்துள்ளது. ஒரு கடற்படை லெப்டினென்ட், ஒரு சார்ஜன்ட் மேஜர், ஒரு மொழிபெயர்ப்பாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அதிகாரபூர்வமான அறிக்கையொன்று கூறுகின்றது.

இந்தோனேஷியகுடியரசின் வேண்டுகோள்

இந்தோனேஷிய குடியரசு-டச்சு அதிகாரிகள் இடையே யுத்த நிறுத்த சமரஸப் பேச்சுவார்த்தைகளை நடத்த முன்வந்துள்ள ஐக்கிய நாடுகள் சமரஸ சபைக்கு குடியரசு அரசாங்கம் விடுத்த வேண்டுகோளில் இப்பேச்சுவார்த்தைகளை விரைவாக முடிக்கும்படி கேட்டுள்ளது என்று குடியரசு செய்தி ஸ்தாபனம் தெரிவிக்கின்றது. கிழக்கு ஜாவாவில் 46 இந்தோனேஷிய கைதிகள் ரயில்வே சாமான் பெட்டிகளில் இறந்ததுபோன்ற சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நடப்பதைத் தடுப்பதற்கு இப்பேச்சுவார்த்தைகளை விரைவாக முடிக்கும்படி குடியரசு தெரிவித்துள்ளது.

மதுரா தீவிலே யுத்த நிறுத்தக் கட்டளையை மீறி டச்சு அரசாங்க இராணுவம் நடந்துள்ளதாகக் கூறப்படுவதை விசாரணை செய்யும்படி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தை குடியரசு அரசாங்கம் கேட்டுள்ளது.

இந்தோனேஷியாவில் அரிசி விநியோகத்தால் இந்தோனேஷிய குடியரசுக்கும் பங்கு கொடுக்கப்படவேண்டுமென்று கேட்டுள்ளது.

இந்த மூன்று கோரிக்கைகளையும் ஐக்கிய நாடுகள் சமரஸ சபையிடம், யுத்த நிறுத்த ஒப்பந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும் குடியரசு பிரதிநிதிகள் தலைவர் டாக்டர் லெய்மேனு சமர்ப்பித்தாரென்று அறியப்படுகிறது.

இந்தோனேஷியாவிலுள்ள டச்சுப் படைகள்

இப்பொழுதுகலைக்கப்படமாட்டாது

ஹேக், நவ 29

இந்தோனேஷியாவிலுள்ள டச்சுப் படைகள் கலைக்கப்படுவது இன்னும் பல மாதங்களுக்கு ஒத்திவைக்கப்படுமென்றும் இப்பொழுது இந்தோனேஷியாவில் நடைபெறும் சம்பவங்கள் அவ்வளவு திருப்தியாயில்லாமையே இதற்குக் காரணமென்றும் ஒரு டச்சு அரசாங்க அறிக்கை! கூறுகின்றது. தொடர்ந்து அந்த அறிக்கையில் கூறப்படுவதாவது:-

ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களை விடமுடியாது

இந்தோனேஷியாவில் டச்சுத் துருப்புகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இடங்களிலிருந்து டச்சுத் துருப்புகளை வாபஸ்பெறுவது முடியாத விஷயம். ஆனால் அரசியல் நிலைமையில் அபிவிருத்தி ஏற்படுமானால் இங்கு படைகள் கலைக்கப்படுவதுபற்றி பின்னால் ஆலோசிக்கப்படும். (ராய்ட்டர்)

துறைமுக மாதிரி நிர்மாணம்

கொழும்பு, நவ. 29

பொது ஜனங்களின் பார்வைக்காக கொழும்புத் துறைமுகமாதிரி ஒன்று ஒரு சிறிய அளவில் தயாரிக்கப்பட்டு வருகிறது. இது சரியாக கொழும்புத் துறைமுகம் மாதிரியே தண்ணீர் ஆழம் முதலியவற்றையும் விளக்கக்கூடிய விதமாகத் தயாரிக்கப்படும் எனத் தெரிகிறது. இம்மாதிரியில் கப்பல்களும் இடம்பெறும் எனத் தெரிகிறது.

ஒரு லட்சம் டன் கொப்பரா இந்தியாவில் இறக்குமதி

சுய தேவையைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை

பம்பாய், நவ 29

இந்திய தென்னைப் பொருள் சபையின் ஆறுவது கூட்டம் நேற்று இங்கு நடைபெற்றது. சென்னை, பம்பாய், அஸாம் ஆகிய முக்கிய இடங்களில் தென்னங் கன்றுகள் உற்பத்திக்கு மத்திய இடங்களை அமைப்பது சம்பந்தமான திட்டம் இக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. சென்னைத் திட்டம் மிகப் பெரியதாகும். இத்திட்டப்படி சென்னை மாகாணத்தில் ஐந்து இடங்கள் தென்னை நாற்று உற்பத்திக்கு எடுக்கப்படுமென்றும் தென்னை வளர்ப்பவர்களுக்கு வருட வீதம் இங்கு 160 000 நாற்றுக்கள் வழங்கப்படுமென்றும் கூறப்படுகிறது.

இக்கூட்டத்துக்குத் தலைமை வகித்த இந்திய விவசாய ஆராய்ச்சி சபை உப தலைவர் ஸர் டார்த்தசிங் பேசுகையில், தேங்காய்கள் இந்தியாவுக்கு அதிகம் தேவையென்றும் இந்தியா தன் சுய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கவேண்டுமென்றும் வருடந்தம் இந்தியா இப்பொழுது, வெளிநாட்டிலிருந்து சுமார் 100,000 டன் கொப்பரா இறக்குமதி செய்கிறதென்றும் குறிப்பிட்டார்.

தென்னைப் பொருள்கள் விலைகள் முதலியவைபற்றி ஆலோசித்து விலைகள் சம்பந்தமான திட்டங்களை வகுக்க ஆலோசனைக்கு வேண்டிய சிபார்சுகளைச் செய்வதற்கு ஒரு உப கமிட்டி தெரியப்பட்டது.

சென்னை, தென்னை நாற்று உற்பத்தி திட்டப்படி எட்டு இடங்களில் தென்னை நாற்றுகள் உற்பத்தி இடங்கள் அமைக்கப்படும். கோயம்புத்தூர், நீலேச்லாம், பட்டாம்பி, பட்டுக்கோட்டை, ஆடுதுறை, சமல்கோட்டை, மருதேறு, நாகபள்ளி ஆகிய இடங்களில் தென்னை நாற்று உற்பத்தி இடங்கள் ஸ்தாபிக்கப்படும்.

அதிக தென்னை வளருங்கள் என்னும் பிரசார வேலைகளைச் செய்து மாகாண அரசாங்கங்களின் உதவியுடன் தென்னை பொருள் சபையின் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவந்து அதிக தென்னைகளை உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் எடுப்பதுபற்றியும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. [அ-பிரஸ்]

மிலானில் பொது வேலைநிறுத்தம்

சமரசமாக முடிவுசெய்யப்பட்டது

ரோமாபுரி, நவ 28

நேற்று சில மணி நேரங்களாக மிலான் பகுதியில் பொது வேலை நிறுத்தம் அனுஷ்டிக்கப்பட்டதால் எல்லா வேலைகளும் தடைபட்டுவிட்டன. இந்த வேலை நிறுத்தம் இன்று அதிகாலையில் கைவிடப்பட்டது. வேலை நிறுத்தம் காரணமாக முனிசிபல் காரியாலயங்களில் இருந்த இராணுவ தொழிலாளர் வாபஸ் பெறப்பட்டனர். இவ்விதம் அரசாங்க அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

உள்நாட்டு இத்தாலிய மந்திரி சபை எட்டோர் ருலோ என்பவரை பதவியிலிருந்து நீக்குவதாக அறிவித்ததை ஆட்சேபித்தே இங்குள்ளவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இரவு முழுவதும் நகர மக்கள் கமிட்டிக்கும் வேலைநிறுத்த அமைப்பாளர் பிரதிநிதிகளுக்கும் அரசாங்க நகர அதிகாரிகளுக்கும் ஸ்தல இராணுவ அதிகாரிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளின்பின்னர் இன்று காலையில் நிலைமை பழையபடிக்கு திரும்பியதென்றும் இன்னும் சில நாட்களுக்கு அவர் பதவியிலிருப்பாரென்றும் அறிக்கை கூறுகின்றது. [ராய்ட்டர்]

இந்திய யூனியன்-ஹைதராபாத் தற்காலிக உடன்படிக்கை

மவுண்ட் பேட்டன் பிரபு கையெழுத்திட்டார்

புதுடில்லி, நவ 29

நிஜாம் கையெழுத்துப் போட்ட ஒப்பந்த நகலுடன் ஹைதராபாத் தூதுகோஷ்டி இன்று காலை டில்லிக்கு வந்து சேர்ந்தது. இங்கு இந்தியா-ஹைதராபாத் ஒப்பந்தத்தில் இந்திய கவர்னர் ஜெனரல் மவுண்ட் பேட்டன் பிரபு கையெழுத்திட்டார்.

ஹைதராபாத்

இந்திய அரசாங்கத்துக்கும் ஹைதராபாத் சமஸ்தானத்துக்கும் இடையில் உள்ள ஒப்பந்தத்தில இந்திய அரசாங்கத்தின் சார்பில் மவுண்ட் பேட்டன் பிரபு இன்று பிற்பகல் 12-40 மணிக்கு கைச்சாத்திட்டார்.

இன்று காலை நிஜாம் கையெழுத்திட்ட நகல் ஒப்பந்தத்துடன் ஹைதராபாத் தூதுகோஷ்டி புதுடில்லி வந்து சேர்ந்தது. தூதுகோஷ்டி அரசாங்க மாளிகையில் கவர்னர் ஜெனரலைப் பேட்டி கண்டது. சமஸ்தானங்கள் மந்திரி சர்தார் பட்டேலும் காரியதரிசி திரு வி. பி. மேனனும் பிரசன்னமாயிருந்தனர்.

அரசியல் நிர்ணய சபையில் டிபுடி பிரதமர் சர்தார் பட்டேல் பிற்பகல் பேசுகையில், இன்று காலை ஹைதராபாத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதென்று கூறி ஒப்பந்தங்களில்ஒன்றைச் சபையில் சமர்ப்பித்துவிட்டு ஹைதராபாத் சமஸ்தானத்தின் பழைய தூது கோஷ்டியுடன் பேச்சுவார்த்தை நடத்திய ஒப்பந்தப்படியேதான் இந்த ஒப்பந்தமும் இருப்பதாகவும் ஒன்றுமில்லாது இருப்பதிலும் பார்க்க குறிப்பிட்ட காலத்துக்காயினும் ஒப்பந்தம் செய்து கொண்டது நலம் என்று கருதுவதாகவும் கூறினார். இரு நாடுகளுக்கிடையேயும் நல்லெண்ணத்தின் மீது ஒப்பந்தம் செய்துகொள்வதுதான் உசிதமானதெனறும் அவர் குறிப்பிட்டார்.

உடன்படிக்கை ஷரத்துகள்

லண்டன், நவ 28

நாளை காலை டில்லியிலும் ஹைதராபாத்திலும் இந்திய யூனியனிடம் ஒரு தற்காலிக ஒப்பந்தம் கையெழுத்திடப்படுவதாக லண்டனில ஹைதராபாத் சர்க்கார் அறிவித்தது.

இந்த ஒப்பந்தத்தில் நிஜாமின் ராஜாங்க உரிமை பாதிக்கப்படவில்லையாம்.

அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:- எல்லா டொமினியன் துருப்புகளும் (இந்திய டொமினியன் துருப்புகள்(ஹைதராபாத் எல்லையிலிருந்து

(4-ம் பக்கம் பார்க்க)

ஆசிய நாடுகள் ஒற்றுமையின் முக்கியம்

டாக்டர்ஷாரியார் பிரசங்கம்

புதுடில்லி, நவ 29

ஆசிய உறவு ஸ்தாபனம் உலக விவகார இந்தியக் கவுன்ஸில் ஆகியவற்றின் கூட்டு ஆதரவில் நடந்த கூட்டத்தில் இந்தோனேஷியாவின் மாஜி பிரதம மந்திரி டாக்டர் சுதன் ஷாரியார் பேசுகையில் கூறியதன் சாரமாவது:

'ஆசிய நாடுகள் உலக நாடுகளிடையே செல்வாக்குடன் இருக்க வேண்டுமென்றால் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்கு வெளியிலும் இவை மிக நெருங்கி ஒத்துழைக்க வேண்டுவது அவசியம். ருஷிய அமெரிக்கப் பிடிவாதங்களினால் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஸ்தம்பித்து விடும்போலிருக்கிறது. சர்வதேசங்களிடையே ஆசிய நாடுகள் செல்வாக்குடனிருக்க வேண்டுமானால் முற்றிலும் இந்த ஸ்தாபனத்தையே நம்பியிருந்தால் போதாது. தனித்தனியாகவும் மொத்தமாகவும் நம் நாடுகளின் நலனை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின எல்லைக்கு வெளியே நாம் ஒத்துழைப்பது அவசியமாகும். போகப் போக இதனால் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்கேகூட நன்மை ஏற்படும்.

"இந்தியா, சீனா, இதர ஆசிய நாடுகள் ஆகியவற்றின் மக்கள், தங்கள் உள்நாட்டு விஷயங்களில் எவ்வளவு கஷ்டப்பட்டபோதிலும் இவர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டுவது மிக அவசியமான விஷயம் என்பதைச் சீக்கிரம் அறிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன். உலகத்தில் மற்றொரு நெருக்கடி நேர்ந்தால் நாம் அனைவரும் ஒன்றாக இருந்தாலன்றி நம் நாடுகளில் எதுவும் தப்ப முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை.

"ஆசிய நாடுகள் தங்கள் பொதுப் பிரச்னைகளைச் சமாளித்துக்கொள்ள ஒன்றுபட வேண்டுமென்று விரும்புவது இயற்கையே.

"இந்தியா தன் உள்நாட்டுப் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள மஹத்தான முயற்சி செய்கிறது. உடனடியாக இது இந்தோனேஷியாவுக்குப் பயனளிக்கக்கூடியதென நாங்கள் கருதுகிறோம்" என்று டாக்டர் ஷாரியார் கூறினர்.

கூட்டத்திற்கு பண்டித ஹிருதயநாத குன்ஸரு தலைமை வகித்தார்.

மஹாத்மாவுடன் ஷாரியார் பேட்டி

புதுடில்லி. நவ 28

இந்தோனேஷியாவின் மாஜி பிரதம மந்திரி டாக்டர் சுதன் ஷாரியார் இன்று பிற்பகல் மஹாத்மா காந்தியைப்பேட்டி கண்டார். தம் நாடு சம்பந்தப்பட்ட பல பிரச்னைகளில் மஹாத்மா காந்தியின் ஆலோசனைகளைக் கேட்டதாக அவர் பேட்டிக்குப் பின் கூறினர் ஆஸ்திரேலியா போவதற்காக அவர் நாளை சிங்கப்பூருக்குப் பிரயாணமாகிறார்.

ஆஸ்தான கவிகளை நியமிக்க அரசாங்கத்தின் தீர்மானம்

எழுத்தாளர்களுக்குப் பரிசுகள்

மலையாள அகராதி தயாரிப்பில் சென்னை அரசாங்க உதவி

சென்னை, நவ 29

தென்னிந்தியாவின் முக்கிய பாஷைகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக சென்னை அரசாங்கம் பல வேலைகளையும் செய்வதற்கு ஆலோசித்துள்ளது. வெள்ளிக்கிழமை பிரதமர் திரு ஓ பி ராமசுவாமி ரெட்டியார் தலைமையில் நடந்த மந்திரி சபைக் கூட்டத்தில் இப்பாஷைகளில் அரசாங்க கௌரவம் பெறும் கவிஞர்களுக்கு பரிசளிப்பதாகவும் இப்பாஷைகளில் இலக்கிய, சாஸ்திர நூல்கள் எழுதுபவர்களுக்கும் பரிசளிப்பதாகவும் முடிவு செய்யப்பட்டது. சமஸ்கிருதத்திற்கும் ஒரு பரிசு ஒதுக்கப்படும்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய பாஷைகளில் கவிஞர்களாக அதற்காக நியமிக்கப்படும் சபையினால் தெரியப்படுபவர்களுக்கு அரசாங்க கௌரவ புலவர் என்ற பட்டம் அளிக்கப்படும். இப்பட்டம் ஐந்து வருட காலங்களுக்கு இருக்கும். பிரதி வருடமும் நன்கொடையாக ரூபாய் 1000 இவர்களுக்கு வழங்கப்படும்.

பிரதி வருடமும் சென்னை அரசாங்கம், இலக்கிய சாஸ்திர விஷயங்களில் ஆறு விஷயங்களைத் தெரிந்து அவற்றில் சிறந்த எழுத்தாளர்களுக்குப் பரிசளிக்கப்படும். நான்கு பாஷைகளிலும் வெளியாகும் கவிதை, இசை, உரை, வாழ்க்கை வரலாறு, நாவல், நாடகம், ஆராய்ச்சி, மொழிநூல், சரித்திரம், இலக்கியம், பௌதிகம், ரசாயனம், இயற்கை, வேளாண்மை, பொருளாதாரம், அரசியல், சமுதாயம், கணிதம், போதனை முறை, பாலர் படிப்பு, தத்துவம், மருத்துவம், யாத்திரை, வான சாஸ்திரம், நெறி இயல், மனோதத்துவம் ஆகியவைபற்றிய நூல்களுக்கு முதற் பரிசாக ரூபாய் 500ம் இரண்டாம் பரிசாக ரூ. 250ம் வருஷந்தோறும் கொடுப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

மலையாள அகராதி

திருவாங்கூர் சர்வகலாசாலையுடன் ஒத்துழைத்து மலையாள அகராதியை முற்றுற வைக்க சென்னை அரசாங்கம் சம்மதித்துள்ளது. முதல மூன்று வருடங்களுக்கு பிரதி வருடமும் ரூபாய் 5000 இதற்காக நன்கொடையளிக்க மந்திரி சபை முடிவுசெய்துள்ளது மூன்று வருடங்களின் பின் இது மீண்டும் பரிசிலனை செய்து புதுப்பிக்கப்படும்.

இந்த அகராதியை முற்றுற வைப்பதற்கு சென்னை அரசாங்கத்தின் உதவியை திருவாங்கூர் சர்வகலாசாலை உப அத்தியட்சகர் கேட்டிருந்தார். அவரது கோரிக்கைக்கு இணங்கி மந்திரி சபை உதவியளிக்க முன்வந்துள்ளது.

ஜப்பானியக் கல்வி முறை

திருத்தப்பட வேண்டும் என்கின்றனர் சீன, சோவியத் பிரதிநிதிகள்

டோக்கியோ, நவ. 26

ஜப்பான் விவகார சம்பந்தமான நேசதேச சபையில் அங்கத்துவம் வகிக்கும் சீன, சோவியத் பிரதிநிதிகள் ஜப்பானிய கல்வி முறை நல்ல பாதையில் இன்னும் திருப்பப்படவில்லை என்று கூறிக் குற்றம் சாட்டியுள்ளார்கள். இதே குற்றச்சாட்டை ஆஸ்திரேலிய பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் பிரதிநிதி ஏற்கனவே செய்துள்ளார்.

சோவியத் பிரதிநிதி பின்வருமாறு குறிப்பிட்டார்:—

ஜப்பானிய கல்வியில் ஜனநாயக முறையானது மிகவும் நத்தை வேகத்திலேயே புகுத்தப்படுகிறது. அத்துடன் உபாத்தியாயர்மார்களுக்குச் சரியான சம்பளம் இல்லை. குழந்தைகளுக்குப் படிப்பு வசதிகள் போதாது. பாட புத்தகங்களில் யுத்தத்திற்கு முன் அரசாங்கத்தால் செய்யப்பட்டு வந்த பிரசாரங்கள் அகற்றப்படாது இருந்து வருகின்றது"

அமெரிக்கப் பிரதிநிதி "ஜப்பானியப் பிரச்னை மிகப் பெரிய பிரச்னை. ஒரு கொடியில் மாற்றங்கள் முழுவதையும் செய்துவிட முடியாது. இருந்தபோதிலும் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்கனவே உண்டாகியுள்ளது" எனக் குறிப்பிட்டார். (ராய்ட்டர்)

லொறியுடன் மோட்டார் சைக்கிள் மோதியது

கொழும்பு, நவ. 29

மக்கலம் வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த திரு டெமன்ட். டி சில்வா என்பவர் ஒரு லொறியால் மோதுண்டு காயமடைந்தார். இதன் பயனாக அவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு காலமானார்.

உங்கள் மனப்பூர்வமான
அன்புக்குரியது
1948-ம் வருடத்து
மங்களகரமான
மெய்கண்டான்
திருக்குறட் கலண்டர்
கண் கவர்ச்சியான அழகிய பெரிய தேதிகள் விசேஷ அடையாளங்கள் விரும்பத்தக்கமுறையில் திருக்குறள்-மணி வசனங்கள் உள்ளது.
(வாங்கும்போது?)
மெய்கண்டான்
திருக்குறட் கலண்டர்
என்று கேளுங்கள். தேதி ஒற்றைகளில "மெய்கண்டான் பிறெஸ்" என்று பதித்திருப்பதைக் கவனித்துப்பார்த்து வாங்குங்கள். எங்கும் கிடைக்கும்.
பிந்தினல் கிடைப்பதரிது!
மெய்கண்டான்
அச்சியந்திரசாலை,
மட்டுவில், சாவகச்சேரி P. O.

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, நட்டாரந் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து௵ கார்த்திகை மீ 16உ
திங்கட்கிழமை

வாழ்த்துகிறோம்!

துரியோதனன் தம்பி துச்சாதனனைக் கூப்பிட்டு ஐவரின் மனைவி திரௌபதியின் துகிலை உரியச் சொன்னான். அப்படியே துச்சாதனன் சபையில அவளின் ஆடையைப் பிடித்திழுக்க ஆரம்பித்தான். பாண்டவர்கள் இதைப் பார்த்திருந்தனர். இனி பகவான் ஒருவனே துணை என்று பாஞ்சாலி 'லோகநாதா! ஈசனே, இந்த நிலையை அடைந்த என்னை நீயும் கைவிட்டுவிடாதே! உன்னைச் சரணமடைகிறேன். காப்பாற்று!" என்று அச்சுதன் பேரைச்சொல்லிப் பெருங் கூச்சல்போட்டு மூர்ச்சையானாள். அப்போது ஒரு பெரிய ஆச்சரியம் நடந்தது. துச்சாதனன் இழுக்க இழுக்க, திரௌபதியின் வஸ்திரங்கள் புதிது புதிதாக உண்டாகிக்கொண்டு வந்தன. பெருங் குவியலாகத் திவ்விய ஆடைகள் சபையில் குவிந்தன.

துச்சாதனன் களைத்துப் போய் தரையில் உட்கார்ந்தான் சபையில் கலகலவென்று சத்தம் உண்டாயிற்று சந்தோஷம் நிலவியது கோபத்தினால உதடுகள் துடிக்க பீமன் எழுந்து பேரொலியுடன் பிரதிக்ஞை செய்தான்.

இது மகாபாரதத்தில் உள்ள கதை. இந்தமாதிரியான ஒரு மகாபாரதம் நேற்றுக் காலையில கொழும்பு நகர சபை மண்டபத்தில நடைபெற்றது. வட மாகாணத் தேர்தலில் தோல்வியுற்ற சில யூ. என். பி. தமிழ் குறுங்கொள்ளிகள் தங்கள் கூட்டமொன்றை அங்கு கூட்டினார்கள். இலங்கைத் தமிழர் கூட்டம் என்றார்கள். உண்மைத் தமிழ்மக்களால் தங்களின் பிரதிநிதிகள் என இரண்டு மாசங்களுக்கு முன்பு வட மாகாணத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றப் பிரதிநிதிகளை கூட்டத்திற்கு வரக்கூடாதென்றும் கடித மூலம் அறிக்கை செய்தார்கள் தமிழ் மக்களை யூ. என். பிக்கு அடிமையாக்க முற்பட்டார்கள். தமிழத் தாயின் துகிலை உரிந்து மானத்தைக் கெடுக்கத் துணிந்தார்கள். தமிழ் மக்களின் பிரதிநிதிகளை கேவலப்பண்ண எண்ணினார்கள். நடந்ததென்ன? கிருஷ்ண பரமாத்மா திரௌபதியின் மானத்தைக் காப்பாற்றியது போன்று வீரத் தமிழ் மக்கள், தமிழ்த் தாயின் மானத்தைக் காப்பாற்றினார்கள். போலித் தமிழர்களுக்கு இடமில்லை என்று சொன்னார்கள்.

கூட்டத்தைக் கூட்டியவர்கள் ஜனநாயக முறைப்படி சபையார் தலைவரைத் தெரிவு செய்ய விடாது முன்கூட்டியே ஒருவரைக் கொண்டுவந்து இருத்தினார்கள். இதை சபையோர் ஆட்சேபித்தார்கள் ஜனநாயக தர்மப்படி நடந்து கொள்ளும்படி மேடையில இருந்தவர்களைக் கேட்டார்கள் ஆனால் மேடையில் உள்ள தானதோன்றிப் பிரபுக்கள் சபையார் விருப்புக்கு இடங்கொடுக்கவில்லை. அதற்குப் பதிலாகப் போலிஸாரை வரவழைத்தனர். மானமழிந்தபின் வாழாமை முன் இனிதே என்பது தமிழன் குறிக்கோள். ஒருவரையுமே பேசவிடாது தடுத்தார்கள். அதுவும் சாத்விக முறையில்தான் செய்தார்கள். இத்தகைய மானங்காத்த தமிழ் வீரர்களை நாம் வாயார, மனமார வாழ்த்துகிறோம்.

22 தமிழ்நாடு காங்கிரஸ் ஊழியர்கள் கைது

நாகர்கோயில், நவ. 29

ஸ்ரீ எம். கும்பலிங்கம் அறிவிக்கிறார்:—

திருவாங்கூர் தாலுகாவில் அருவிக்கரை பாக்குதி கச்சேரியில கல்வீசியதாக 22 திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர். இதுவரை 125 தமிழ்நாடு காங்கிரஸ ஊழியர்கள கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை-தென்இந்தியா விமானப் போக்கு வரவு

டிசம்பர் 10-ம் உ ஆரம்பம்

இலங்கை சர்க்கார் ஏற்பாடு

கொழும்பு, நவ. 30

இலங்கை அரசாங்கத்தால் திறந்து வைக்கப்பட்டுள்ள இலங்கை இந்திய விமானப் போக்கு வரத்து டிசம்பர் 10உ ஆரம்பிக்கிறது. வழியில் விமானம் காங்கேசன்துறை விமான நிலயத்திலும் இறங்கிச் செல்லும்.

இது சம்பந்தமாக பரீட்சார்த்தமாக ஆகாயப் போக்குவரத்து டைரக்டர் காங்கேசன்துறைக்கு ஒருதரம் பறந்து சென்றார்.

இவ்விமானப் போக்குவரவின் நேர அட்டவணை கீழே தரப்படுகிறது. ஒவ்வொரு திங்கள், புதன், வெள்ளி சனிக்கிழமை காலைகளிலும் 8 மணிக்கு விமானம் ரத்மலானையை விட்டு புறப்படும். காங்கேசந்துறைக்கு 9-15க்குப் போய்ச் சேர்ந்து அங்கிருந்து 9 35க்கு சென்னை புறப்படும் சென்னையைச்சேர 11-05 ஆகிவிடும் இதன்பின் இந்தியாவிலிருந்து மீளும் பிரயாணம் பிற்பகல் ஒரு மணிக்குச் சென்னையில் இருந்து புறப்பட்டு 2-30க்கு காங்கேசந்துறை வரும் அங்கிருந்து 2-45க்குக் கொழும்பு நோக்கி விமானம் பறக்கும். 4 மணிக்கு ரத்மலானைக்கு விமானம் வந்துவிடும்.

இதன்படி கொழும்பிலிருந்து காங்கேசந்துறைக்குப் போக 1-15 மணித்தியாலமும் காங்கேசந்துறையிலிருந்து இந்தியா செல்ல 1-30 மணித்தியாலமுமே ஆகும்:

விமானப் போக்குவரவு அதிகரிப்பதன் காரணமாக ரத்மலானை விமான நிலயத்தை ரம்மியம் மிகுந்த தாக்குவதற்கு ஏற்பாடுகள் நடக்கின்றன. கண்ணைக் கவரும் புஷ்ப மெத்தைகளுடன் கூடிய சுகந்த பூந்தோட்டம்; மின்னல்போல துள்ளி விளையாடும் நீரூற்றுகள்; அவற்றின்மீது வர்ண ஒளியைச் சிதறவிடும் மின்சார லைட்டுகள்; குறிப்பிட்ட சில மாலை நேரங்களில் பாண்டு வாத்திய இன்னிசை விருந்து: இவற்றை எல்லாம் பிரயாணிகளுக்குத தருவதற்கு முஸ்தீபுகள் செய்யப்பட்டுவருகின்றன

விமானப் பிரயாணப் பிரசாரத்திற்காக தற்போது விமானம் ஒன்று காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கிறது. ஏராளமான பள்ளிப்பிள்ளைகள் வந்து பார்த்துச் செல்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் காசநோய் தாண்டவம்

வருடம் 800 பேர் பலி

வைத்திய டைரக்டர் பேச்சு

கொழும்பு, நவ. 30

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு வருடமும் 800 பேர் கசநோயினால் மாண்டு வருகிறார்கள் சாகும் ஒவ்வொரு மனிதனுக்கும் குறைந்த பட்சம் ஐந்து மனிதர் வீதம் நோயாளிகள் உள்ளார்கள். யாழ்ப்பாணத்தைச் சீரழித்துவரும் இந்நோய் பரவுவதைத் தடுக்க கசநோய் ஆஸ்பத்திரிகள் நிர்மாணிக்கப் படுவது அவசியம் மேற்கண்டவாறு நேற்று மாலை வை. எம். ஸி. ஏ. யில நடைபெற்ற ஹார்ட்லிகாலேஜ் பழைய மாணவர் சங்கக் கூட்டத்தில் வைத்திய சுகாதாரப் பகுதி டைரக்டர் டாக்டர் எஸ். எப். செல்லப்பா குறிப்பிட்டார்.

ஸ்ரீமதி ஆயிஷா ராவூப் பேசுகையில் தமிழர் ஐக்கிய முன்னணி அமைத்தது தமது உரிமைக்குப் போராட முன் வர வேண்டும் என்றும், பிரதமர் சேனநாயக்கா தமிழருக்குத் தலைமை தாங்கும் தமிழர் காங்கிரஸை அலட்சியம் செய்ததைக் கண்டித்தும் பேசினார்.

சங்கத் தலைவராகத் தெரியப்பட்ட திரு.கே. ஆழ்வாப்பிள்ளை "நாட்டில் அவசிய பொருட்கள் வாங்கப் போதிய பணம் இல்லாததால் உணவு இறக்குமதி வெட்டப்படலாம்" எனக் கூறி எச்சரித்தார்.

கூட்டத்திற்கு ஏராளமான பழைய மாணவர்கள் சமுகமளித்திருந்தனர்,

இந்தியா பிரிவினைக்கு அமெரிக்கா உட்கை

பாலஸ்தீனத்திலும் அமெரிக்கா செய்யும் விளையாட்டு!

ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்த பம்பாய் பத்திரிகை ஆசிரியர் கருத்து

லண்டனில் நடைபெற்றவரவேற்புக்கூட்டத்திற்கு உலகப் பத்திரிகா நிருபர்கள் விஜயம்

லண்டன், நவ 29

பம்பாய் பத்திரிகையான "பிளிட்ஸ்" பத்திரிகையின் ஆசிரியர் திரு. ஆர். கே. கரஞ்சியாவுக்கு பிரிட்டனிலுள்ள இந்திய பத்திரிகா நிருபர் சங்கத்தார் ஓர் வரவேற்பு விருந்தளித்தனர். அப்பொழுது அவர் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- நான் ஐரோப்பிய நாடுகள் முழுவதிலும சுற்றுப் பிரயாணம் செய்து நிலைமைகளை கவனித்து வந்தேன். பிரான்சும் மற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளும் இப்பொழுது அமெரிக்காவின் காலனிகளாக விளங்குகின்றன. பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியா எப்படி இருந்ததோ அதே போன்றுதான் இப்பொழுது பிரான்ஸ் அமெரிக்க ஆதிக்கத்திலிருக்கிறது. "இரும்புத் திரை" யூகோஸலேவியா நாட்டிலோ அல்லது செக்கோஸலேவியா நாட்டிலோ இல்லை. அது ஜெர்மனியிலுள்ள அமெரிக்கப் பிரதேசத்திலதான் தென்படுகிறது.

நான் ஐரோப்பாவில் சுற்றுப்பிரயாணம் செய்ததன் பயனாக அறிந்தது என்னவென்றால் இந்தியாவைப் பிரிப்பதில் அமெரிக்காவும் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது என்பதுதான். இதே விஷயத்தைத்தான் இப்பொழுது பாலஸதீன் சம்பந்தமாகவும் அமெரிக்கர் கையாளுகிறார்கள்.

ஆகவே அமெரிக்க டாலர் ஏகாதிபத்தியம் உலக நாடுகளின் சுதந்திரத்திற்காகவும் சமாதானத்திற்காகவும் பாடுபடுகிறது என்ற தவறான எண்ணத்தை இந்தியா விட்டொழிக்க வேண்டும். அமெரிக்காவில் முற்போக்கு வாதிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் இன்று அமெரிக்காவை ஆளுகிறவர்கள் முற்போக்கு வாதிகள் அல்ல.

இவ்விருந்துக் கூட்டத்திற்கு லண்டனிலுள்ள இந்தியா டெபுடி ஹை கமிஷனர், இந்தியா பாகிஸதான் விளம்பர அதிகாரிகள், அந்நிய பத்திரிகா நிருபர் சங்கப் பிரதிநிதிகள், சாம்ராஜ்யப் பத்திரிகா நிருபர் சங்கப் பிரதிநிதிகள், ஆஸதிரேலியா, நியூஜிலந்து பத்திரிகை சங்கப் பிரதிநிதிகள். பிரிட்டிஷ நாவலாசிரியர் எச். எஸ். பேட்ஸ ஆகியோர் விஜயம் செய்திருந்தனர். நாகபுரி "ஹிதவாதா" பத்திரிகை ஆசிரியர் திரு ஏ டி. மணிக்கும் கரஞ்சியா தம்பதிகளுக்கும் இவ் வரவேற்பு உபசாரம் நடைபெற்றது.

இந்தியப் பெண்கள் உடையலங்காரம்

பிரஞ்சு மாதர்கள் பின்பற்றுகின்றனர்

லண்டன், நவ 28

பாரிஸ் நவீன உடை தைப்பவர், ஐரோப்பிய ஸ்திரீகளுக்கு புதுமாதிரியான ஓர் ஆடையை தயாரிததுள்ளார். இந்திய புடவையைத்தழுவி தயாரிக்கப்பட்டிருக்கும் இவ்வாடைக்கு "ஜெய் ஹிந்த்" என்று பெயர் இந்திய ஆடைக்குரித்தான எல்லா அம்சங்களும் இதில அடங்கியிருப்பதாக இங்கு இளவரசி எலிஸபெத் விவாகததில் கலந்துகொள்ள தனது ஆசிரியர் கணவனுடன் வந்த ஸ்ரீமதி ஏலியன் காஞ்சியா கூறுகிறார்.

சைபீரியாவில் ரஷிய அணுகுண்டு பரீட்சை

நடக்கவில்லையென்று கைதிகள் கூறுவதாக பத்திரிகை செய்தி

டோக்கியோ, நவ. 29

சைபீரியாவில் 'இர்குட்ஸ்க்' என்னுமிடத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த ஜப்பானிய யுத்தக் கைதிகள் சமீபத்தில் ஜப்பான் திரும்பியிருந்தனரென்றும் சைபீரியாவிலே அணுகுண்டு சம்பந்தமாக பரீட்சை நடந்ததாகக் கூறப்படுவதற்கு அத்தாட்சியாக அவர்கள் ஒன்றும் அறியவில்லை யென்றும் டோக்கியோ பத்திரிகை ஜோமியூரி ஷிம்பன் இன்று வெளியிட்டுள்ளது.

இம்மாத முதற்பகுதியில் ஒரு பிரெஞ்சு பததிரிகை, 'இர்குட்ஸக்' என்னுமிடத்திற்குச் சமீபத்தில் ரஷியர் அணுகுண்டு பரீட்சையை ஜூன் 15-ம் தேதி நடத்தியதாக ஒரு செய்தியை பிரசுரித்திருந்தது [ராய்ட்டர்]

மனித உரிமைக் கமிஷன் தலைவர்

ஸ்ரீமதி ரூஸவெல்ட் ஜினிவா புறப்பட்டார்

நியூயார்க், நவ. 29

ஐக்கிய நாடுகள் மனித உரிமைக கமிஷன தலைவர் ஸ்ரீமதி ரூஸ்வெல்ட் ஜினிவாவுக்குப் புறப்பட்டுள்ளார் ஜினிவாவிலே டிசம்பர் 1-ம் தேதி நடக்கும் கூட்டத்தில் சர்வதேச உரிமை மசோதா தயாரிக்கும் வேலைகள் ஆரம்பமாகும் இவர்ஜினிவாவுக்குப் புறப்படுமுன. இந்த உரிமை மசோதாவை 57 நாடுகளும் அங்கீகரிததுவிட்டால் அதனால் அதிக நன்மையிருக்குமென்றும் வருங்கால உலக சமாதானத்துக்கு இது அடிப்படையாக இருக்குமென்றும் கூறினார். [ராய்ட்டர்]

வட மாகாணத்திற்கு தனி சுதந்திர அரசாங்கம்

"உரிமைகளை நிலைநாட்ட போராடுக!"

கள்ளரேடியோ பிரசாரத்தைகண்டுபிடிக்க ராணுவத்திற்கு பாரசீக சர்க்கார் கட்டளை

டெஹ்ரான், நவ. 29

நேற்றிரவு பாரசீகத்தில் புரட்சிக்கு சதி செய்பவர்கள் மறைவாக இருந்து கள்ள ரேடியோ மூலம் பிரசாரம் செய்தனர். அக் கள்ள ரேடியோவைக் கண்டு பிடிக்கும்படி பாரசீக சர்க்கார் ராணுவத்தினருக்கு கட்டளையிட்டிருக்கிறார்கள். அந்த ரேடியோச் செய்தி ஜனநாயகக் கட்சியின் ரேடியோ நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்படுவதாகவும் அஜெர்பெய்ஜான் மக்களும் குர்தி ஜாதியாரும் விடுதலைக்குத் தீரமாகப் போராட வேண்டுமென்றும் விடுதலை நெருங்கி விட்டதாகவும் அக் கள்ள ரேடியோ செய்தியை ஒலிபரப்பியது. அது மேலும் ஒலிபரப்பிய செய்தி பின்வருமாறு;-

வட மாகாணத்தை தனி சுதந்திர நாடாக்க அஜெர்பெய்ஜானிகள் செய்த கிளர்ச்சியும் நடத்திய பிரிவினை இயக்கமும் ஒரு வருடத்திற்கு முன் தோல்வியுற்றது. சென்ற வருடம் தனி சுதந்திர அரசாங்கத்தை நிறுவினோம். அதை நசுக்கிய ரத்த வெறி கொண்ட டெஹ்ரானியர்களை நாம் பழிக்குப்பழி வாங்க வேண்டும் அடிமைகளாக்கப்பட்ட வட மாகாணவாசிகளான அஜெர்பெய்ஜானிகள் இன்று டெஹ்ரான் சர்க்காரின் கொடுமையைக் கண்டித்து கூக்குரலிடுகிறார்கள். நமது உரிமைகளை நாம் அடைய வேண்டும். அவைகளை அடைந்து விடுதலை பெற்று நாம் போராடியே தீருவோம். (ராய்ட்டர்)

வட பர்மாவில் சீனாவின் உரிமை

முக்கியத்துவம் கொடுக்க வேண்டாமென மக்களுக்கு அறிக்கை

ரங்கூன், நவ. 29

வடபர்மா எல்லைப் பகுதியில 77,000 சதுர மைல் பிரதேசத்தினை சீனாவுடன் சேர்க்க வேண்டுமென ஷாங்கையிலிருந்து கிடைத்ததாகக் கூறப்படும் அறிக்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டாமென்று பர்மா வெளிநாட்டிலாகா ஒரு அறிக்கையை பொது மக்களுக்கு விடுத்துள்ளது. இந்த உரிமை கோரி வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் அறிக்கையின் அதிகார பூர்வம்பற்றி விசாரணை நடைபெறுகிறது. (ராய்ட்டர்)

ஐரோப்பாவுக்கு அமெரிக்க உதவி

குறைக்கப்படமாட்டாதென செனட் சபை முடிவு

வாஷிங்டன். நவ. 26

பிரான்ஸ், இத்தாலி, ஆஸ்டிரியா ஆகிய நாடுகளுக்கு அமெரிக்கா செய்யவிருந்த 59 கோடி 70 லட்சம் டாலர் உதவியை 40 கோடியாகக் குறைக்கச் செய்த முயற்சி இன்று அமெரிக்க செனட் சபையில் தோல்வியுற்றது.

ஒரு அங்கத்தினர் இம்முயற்சி 120 அடி ஆழ நீரில மூழ்குபவருக்கு 15 அடி நீளக் கயிற்றை உதவிக்குக் கொடுப்பது போல் இருக்கிறது எனக் குறிப்பிட்டார். [ராய்ட்டர்]

ஜப்பான் சமாதான உடன்படிக்கை

ரஷியாவின் கோரிக்கை

வாஷிங்டன், நவ. 28

ஜப்பான் சமாதன உடன்படிக்கை சம்பந்தமாக ஜனவரி மாதம் சைனாவில் நான்கு வல்லரசுகள் மகாநாடு கூடவேண்டுமென்று ரஷியா சைனாவுக்கு அறிவித்திருக்கிறது. தூரகிழக்கு கமிஷனரின் 11 நாடுகளும மகாநாடு கூடி ஜப்பான் சமாதான உடன் படிக்கை முடிவுசெய்ய வேண்டுமென்று அமெரிக்கா கருதுகிறது. பிரிட்டனும் அமெரிக்காவின் கருத்தை ஆதரித்து 11 நாடுகளுடன் பாகிஸ்தானையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்கிறது.

21 பிரயாணிகளுடன் விமானத்தைக் காணவில்லை

ரோம், நவ. 29

இத்தாலியில் பிஸா என்னுமிடத்திலிருந்து புறப்பட்ட அமெரிக்க விமானமொன்று பிராங்போர்ட் விமான நிலயத்துக்கு நேற்று இரவு 6-20 மணிக்கு வந்து சேர வேண்டியது வரவில்லையென்றும் இந்த விமானத்தில் 21 பேர் பிரயாணம் செய்தனரென்றும் கூறப்படுகிறது. விமானம் காணப்படவில்லையென்றும் கூறப்படுகிறது [ராய்ட்டர்]

இந்திய ராயல் விமானப் படை விமானங்கள்

காஷ்மீர் படையெடுப்புக்கு உபயோகிக்கப்படவில்லை

புதுடில்லி, நவ. 29

இந்திய அரசியல் நிர்ணய சபையில் இந்திய பாதுகாப்பு மந்திரி சர்தார் பலதேவ் சிங் பேசுகையில் காஷ்மீர் படையெடுப்புக்கு இந்திய ராயல் விமானப்படை விமானங்கள உபயோகிக்கப்படவில்லையென்று கூறினார். முந்திய இந்திய அரசாங்கத்துக்கு தேவையற்றதென்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு வெளியிடத்தில தேவையென்று கூறப்பட்டவைகளுமான இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்க ஸ்டோர்கள் பிரிட்டனின் அறிவுறுததற்படி ஏற்றுமதி செய்யப்பட்டனவென்றும் அவர் கூறினர் (ராய்ட்டர்)

சீனத்திலுள்ள சயாம் ஸ்தானிகர்

திரும்புவதற்கு மறுக்கிறார்

நாங்கிங், நவ. 28

சீனத்திலுள்ள சயாம் ஸ்தானிகர் துலாரக்கை சயாமுக்குத திரும்பி வரும்படி சயாமின் புதிய சர்க்கார் உத்தரவிட்டனர். அவர் திரும்ப முடியாதென்றும் புதிய சர்க்காருக்கும் தனக்கும் சம்பந்தமில்லையென்றும் தெரிவிததுவிட்டார்.

பிரதிநிதிகள் திருப்ப உத்தரவு

பாங்காக், நவ. 29

பிலிப்பைனில் நடைபெறும் ஆசிய பொருளாதார மகாநாட்டின் சயாம் பிரதிநிதிகளைத் திரும்பி வரும்படி சயாம் சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

சென்ற வருடம் சுட்டுக் கொல்லப்பட்ட சயாம் மன்னர் ஆனந்தாவின் பிரேத அடக்கம அடுத்த மார்ச்சு மாதத்தில்கூட நடைபெறாது. (ராய்ட்டர்)

லொறி விபத்தினால் இருவர் மரணம்

லொறிச் சாரதி கைது

கொழும்பு, நவ. 29

ஸ்கின்னர்ஸ் ரோடு தட்டாரத்தெருச் சந்தியில் நேற்று ஏற்பட்ட மோட்டார் லொறி விபத்தின் காரணமாக ராமையா என்பவர் ஸ்தலத்திலேயே இறந்து போனார். நல்லகண்ணு என்ற மற்றொருவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே காலமானார். இது சம்பந்தமாக லொறிச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சயாம் அரிசி ஏற்றுமதி

1948-ம் வருடத்தில் 600,000 டன்

பாங்காக், நவ. 29

சயாம் 1948-ம் வருடத்துக்கு சுமார் 600.000 டன் அரிசியை ஏற்றுமதி செய்யுமென்றும் இவ்வருடத்தில் நவம்பர், டிஸம்பர் மாதங்களில் முறையே 32,000 34,000 டன் அரிசி ஏற்றுமதி செய்யப்படுமென்றும் சயாம் வர்த்தக மந்திரி கூறினார்.

கள்ளமாக அரிசி கடத்தப்படுவதை தடுக்க சயாம் கடற்படைக்கு அதிகாரம் வழங்கும் சட்டங்கள் நிறைவேற்றப்படுமென்றும் அரிசி ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாடுகள் கைவிடப்படுவதாக கூறப்படும் வதந்திகள் ஆதாரமற்றவையென்றும் இப்பொழுதுள்ள நிலையில் கட்டுப்பாடுகளும் உள்நாட்டு அரிசி விநியோகமும் இருக்க வேண்டுமென்றும் உள்நாட்டு அரிசி விலை குறைக்கப்படலாமென்றும் அரிசி ரேஷன் அடுத்த வருட முதற்பகுதியில் ரத்துச் செய்யப்படக்கூடுமென்றும் அவர் மேலும் பேசுகையில் தெரிவித்தார். (ராய்ட்டர்)

ஜெர்மன் ஒப்பந்தம் பற்றிய ஆலோசனை

தன்னையும் சேர்க்கச் சீனா கிளர்ச்சி

நாங்கிங், நவ. 26

ஜெர்மன் சமாதான ஒப்பந்தத்தைப்பற்றி ஆலோசிக்கும் பெரிய வல்லரசுகளில் ஒன்றாகத் தன்னையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சீனா மீண்டும் வற்புறுத்தியுள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் அதனை ஏற்றுக்கொள்வதாகவும் சோவியத் முடிவு என்னவென்று தெரியவில்லையெனவும் சீன அயல்நாட்டு இலாகாச் செய்தியறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. [ராய்ட்டர்]

தேங்காய் களவாடியவருக்குச் சிறை

மட்டக்களப்பு, நவ. 27

கும்புறுமூலையில் உள்ள கத்தோலிக்க மிஷனுக்குச் சொந்தமான தென்னந் தோட்டத்தில் இருந்து 10 தேங்காய்களைக் களவாடிவிட்டதாக வேலன் என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது பிரஸ்தாப நபர் இதற்கு முன்னர் 7 தடவை சிறைக்குச் சென்றுள்ளவராவர்.

1927-ம் வருடம் முதலாவதாக ஒரு பெட்டியைக் களவெடுத்த இவர்; கடந்த மூன்று முறைகளும் மாடுகள் களவாடியதற்காகச் சிறைக்கனுப்பப்பட்டார்.

இத்தடவை அவருக்கு 6 மாதச் சிறைத் தண்டனையும், 2 வருட போலிஸ கண்காணிப்பும் விதிக்கப்பட்டது. (ந-கி)

தூரகிழக்கு நாடுகளிலும் ஒரு கமியூனிஸ்ட் அகிலம்

ஹார்பின் நகரில் நிறுவப்பட்டது

அபிப்பிராயம் கூற சீன சர்க்கார் மறுப்பு

நாங்கிங், நவ 29

ரஷியாவுக்கு மேற்கே கிழக்கு ஐரோப்பாவில பெல்கிரேட் நகரில் 9 நாடுகள் சேர்ந்து ஒரு கமியூனிஸ்ட் அகிலத்தை நிறுவியதைப்போல ரஷியாவுக்குக் கிழக்கே தூரகிழக்கு ஆசியாவில் கமியூனிஸ்டுகளின் ஆதிக்கத்திலிருக்கும் மஞ்சூரியாவிலுள்ள ஹார்பின் நகரில நவம்பர் 20-ம தேதியன்று 3 நாடுகள் சேர்ந்து ஒரு கமியூனிஸ்ட் அகிலம் நிறுவப்பட்டது.

இச் செய்தி சாங்சுன் நகரிலிருந்து அத்தாட்சியுள்ள செய்திகளை அனுப்பும் சீனப் பத்திரிகை செய்தி ஸ்தாபனத்தார் அனுப்பியிருக்கின்றனர்,

இந்த கமியூனிஸட் மகாநாட்டிற்கு சோவியத ரஷியா, வெளி மங்கோலியா, கொரியா, சைனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள கலந்துகொண்டார்கள். ஜப்பானிய பிரதிநிதிகள் வர அனுமதிக்கப்படவில்லை. ஜப்பான சமாதான உடன்படிக்கை இன்னும் நிறைவேறாதிருப்பதால் ஜப்பான் கமியூனிஸட் கட்சி இம் மகாநாட்டில் கலந்து கொள்ளலாகாதென்று சிலர் ஆட்சேபித்தனர்.

இம் மகாநாட்டில் கீழ்க் கண்ட விஷயங்கள் முடிவுசெய்யப்பட்டன:- தூரகிழக்கு நாடுகளில கமியூனிஸ்ட் பிரசாரம் செய்ய ஒரு கமியூனிஸட் அகிலத்தை நிறுவ வேண்டும். சுதந்திரப் போராட்டத்தில் தூரகிழக்கு நாடுகள் பரஸபரம் ஒத்துழைக்கவேண்டும் கமியூனிஸ்ட் புரட்சிக்கு ஆயததம செய்யவேண்டும்

ஜப்பானிய கமியூனிஸ்ட் கட்சியார் வெளி நாட்டுக் கமியூனிஸ்டுகளின் உதவி தங்களுக்கு வேண்டாமென்று அபிப்பிராயம் தெரிவித்ததாகச் சொலலப்படுகிறது.

சீன அந்நிய நாட்டுக் காரியாலயததார் இவ் விஷயம்பற்றி அபிப்பிராயம கூற மறுத்துவிட்டனர். [ராய்ட்டர்]

போலித் தமிழர்கள் புறமுதுகு காட்டி ஓடினர்

தமிழர் இனத்தைக் காட்டிக்கொடுக்க யூ. என். பி. சதிகாரர் கூட்டம்

பொது ஜனங்களின் அமளிதுமளி, ஆரவாரம்

வால்பிடித்துத் திரியும் தமிழர்கள் வாயடக்கப்பட்டனர்

வீரத்தமிழர்களின் வீராவேசப் பேச்சுகள்

வழக்கறிஞர் திரு. எஸ். சிவசுப்பிரமணியமும் இன்னும் சிலரும் ஐக்கிய இலங்கை என்ற போர்வையில் ஐக்கிய தேசீயக் கட்சிக்கு பந்தம் பிடிக்க "இலங்கைத்தமிழர் கூட்டம்" என்று நேற்றுக்காலை கொழும்பு நகர சபைமண்டபத்தில் கூட்டியகூட்டத்தில் ஒருமணித்தியாலமாக கூச்சலும் கூக்குரலும், அமளி துமளியும், ஆர்ப்பாட்டமும்தான் மலிந்திருந்தன.

நகர சபை மண்டபம் முழுவதும் 'அனுதாபிகள் மாத்திரம்" வரலாம் என்று கொட்டை எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட அட்டைகள் வைக்கப்பட்டிருந்தன.

ஏராளமான போலீஸகாரர் வெளியே காவல் காத்திருந்தனர்.

மூன்று தடவைகளில் வர்த்தக மந்திரி திரு. சுந்தரலிங்கம் கூட்டத்தில் பேச எத்தனித்தார். "பேசாதே போ!" என்று சபையார் சத்தமிட்டனர்.

சாவகச்சேரி பிரதிநிதி திரு. வேலுப்பிள்ளை குமாரசுவாமி மேடையில் ஏறிய ஒவ்வொரு தடவையும் சபையில் நிசப்தம் நிலவியது.

தமிழ் மக்கள் தங்கள் உண்மைப் பிரதிநிதிகளும், தேசத் தொண்டர்களுமாகிய திருவாளர்கள் ஜீ. ஜீ பொன்னம்பலம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், கே. கனகரத்தினம், வே. குமார சுவாமி ஆகியோரை கௌரவித்தனர்.

"மானம் அழிந்தபின் இந்த வாழ்வும் ஒரு வாழ்வா?" என்பது தமிழன் லட்சியம். அதை கொழும்பு நகர சபை மண்டபத்தில வீரத் தமிழர்கள் காட்டி வைத்தார்கள். போலித் தமிழர்கள் தகர்த்தெறியப்பட்டார்கள்.

கொழும்பிலுள்ள சில யூ. என். பி. தமிழர்கள் "இலங்கைத் தமிழர்களின்" கூட்டம் என்று ஒரு கூட்டத்தை நேற்று ஞாயிற்றுக்கிழமை காலையில் கூட்டினார்கள்.

சரியாக 9-30 மணிக்கு கொழும்புப் பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான தமிழ மக்கள் மண்டபத்தில கூடினர் குறிப்பிட்ட நேரம வந்ததும் திரு. குரேசந் தம்பையா அக்கிராசனருக்கு என வைக்கப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்தார். மற்றும் இக்கூட்டத்திற்கென வரவழைக்கப்பட்ட யூ. என். பி. தமிழர்களும் மேடையில் அவர்களுக்கென வைக்கப்பட்டிருந்த ஆசனங்களில் உட்கார்ந்தனர்.

மேடையில் இருந்தவர்கள் திருவாளர்கள் ஹனடி பேரின்பநாயகம், ஸி. சுந்தரலிங்கம் ஏ. எம். புறாடி, ஏ. ஐ. ராஜசிங்கம், ஏ. செல்லமுத்து, பி சரவணமுத்து, ஸி. குமாரசுவாமி, ஸி. இரகுநாதன், கே. ஐயாத்துரை, வி. ஜோசப் இன்னும பலருமாவர். கூட்டத்தில் முதலில் அமைதியும் சாந்தமும் நிலவியது.

திரு. குரேசந் தம்பையா கதிரையில இருந்து எழுந்து திரு எச். வி. இராம ஈஸ்வர என்பவரைக் கூட்டத்தின் காரியதரிசி என அழைத்து ஏதோ வாசிக்கும்படி கேட்டார்.

இச்சமயத்தில் சபையிலிருந்த ஒருவர் எழுந்து ஜனநாயக முறைப்படி கூட்டத்தை நடத்துவதாக இருந்தால் சபையார் தான் கூட்டத்தின் தலைவரை தெரிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டார்.

திரு குரேசந் தம்பையா இக்கேள்விக்குச் செவி சாய்க்க மறுத்து விட்டார். உடனே சபையில் அமளி துமளியும், ஆரவாரமும், சத்தமும் கேட்டது.

"குரேசந் தம்பையா வெளியாலே போ" என்று ஒரே சத்தமாகவிருந்தது. மண்டபத்திற்கு அருகேயுள்ள வராந்தாவிலிருந்தும் ஒரே சத்தமும் கூப்பாடுமாகவிருந்தது. திரு. தம்பையா சபையாரை அமைதியாக இருக்கும்படி கேட்க பல தடவைகளாக எத்தனித்தார். ஆயின் ஒவ்வொரு முறையும் அவரது குரல் கேளாது சபையிலிருந்து வந்த ஆரவாரமும் சத்தமும் அமிழ்த்தியது.

இச்சமயத்தில் வர்த்தக மந்திரி திரு ஸி. சுந்தரலிங்கம் தமது கதிரையை விட்டு எழுந்து ஏதோ பேச எத்தனித்தது தான், கடல் மடை திறந்தது போலச் சபையிலுள்ள ஒவ்வொருவரும் ஒற்றுமையாகச் செய்தது போன்று "துரோகி! இரடா! நீ பேச வேண்டாம்" என்று சப்தமிட்டனர்.

இதன் பின்னர் திரு ரி. உருத்திரா கொஞ்ச நேரம பேசினார். ஆனால் அவரையும் சபையார் பேசவிடாது தடுத்தனர். திரு உருத்திராவின் குரலே கேட்க வொட்டாது செய்தனர்.

திரு ஸி. தியாகலிங்கம் பேச எத்தனித்தார். இதற்கு முன் பேசியவர்கள்போன்று அவரையும் பேசவொட்டாது தடுத்தார்கள்.

திரு ஏ ஜி கார்டினர் சபையாருக்குப் பிரசங்கம் செய்யப் பார்த்தார். அவர் வெளியாலே போகும் வரைக்கும் சபையார் சத்தமிட்டு ஏளனஞ் செய்தார்கள்.

இச்சமயத்தில் திரு கே ஸி நடராஜா [வழக்கறிஞர்] ஏதோ பேச எத்தனித்த போது அவருக்கு அடிவிழும் பருவம் ஏற்பட்டது ஆனால் போலிஸார் இச்சமயத்தில தலையிட்ட படியால் ஒன்றும நடைபெறவில்லை.

இதற்குச் சற்று முன்பு வர்த்தக மந்திரி திரு ஸி. சுந்தரலிங்கம், சாவகச்சேரிப் பிரதிநிதி திரு வி. குமாரசுவாமியைப் போலிஸாருக்குச் சுட்டிக் காட்டி அவர்தான் குழப்படிக்காரன் என்று சொல்லி அவரை வெளியேற்றும்படி கேட்டார்

சபையில் இதற்குமுன் இராத சந்தடியும ஆர்ப்பாட்டமும் நிலவியது "சுந்தரலிங்கம் தான் துரோகி! அவனைத்தான் வெளியே கொண்டு போ" என்று ஒரே சத்தமிட்டுக் கைதட்டினார்கள்.

உடனே திரு வி. குமாரசுவாமி மேடையில் ஏறி சபையாரை அமைதியாக இருக்கும்படி கேட்டார். ஜனநாயக தர்மத்தைக் காப்பாற்றும்படியும் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து சாவகச்சேரிப் பிரதிநிதி பேசும் பொழுது பழைய ரப்பர் கட்டுப்பாட்டு அதிகாரியாகிய திரு பி. சரவணமுத்து சிறிது பேச விரும்புவதாகவும் அமைதியாக இருக்கும்படியும் சொன்னார்

திரு சரவணமுத்து ஆங்கிலத்தில் பேசினார் அதை திரு குமாரசுவாமி மொழிபெயர்த்தார்.

திரு சரவணமுத்து சொன்னதாவது:—

"நான் எந்தக் கட்சியையும் சேர்ந்தவனல்லன். நான் யூ. என். பி. கட்சிக்கு விரோதி. (சபையார் உரக்கக் கைதட்டினார்கள்) தொடர்ந்து திரு சரவணமுத்து கூறியதாவது:-

"நீங்கள் எனது சகோதரர்கள். அமைதியாக இருக்கவேண்டும். இக்கூட்டம் ஒரு கட்சியாராலும கூட்டப்படவில்லை இலங்கைத் தமிழர்களால் தான் கூட்டப்பட்டது. இதில் எல்லாரும் பேசலாம், தமிழ்க் காங்கிரசும் பேசலாம். ஆகவே கூட்டத்தை நடத்த அமைதியாக இருங்கள்'

இந்த நிலைமையில் திரு சரவணமுத்துவையும் வாயெடுக்க விடாது சத்தமிட்டார்கள். கடைசியாகத் திரு. சரவணமுத்து கூட்டம் கலைபட்டு விட்டதாக அறிவித்தார்.

ஆனால் சபையில் இருந்தவர்கள், "மேடையில் உள்ளவர்கள் வெளியே போனால்தான் நாங்கள் போவோம்" என்று சத்தமிட்டார்கள்.

ஆகவே ஒருவர் பின் ஒருவராக மேடையிலிருந்தவர்கள் வெளியேறினார்கள் "சுந்தரலிங்கம் போ" "குரேசந் போ" என்றும் சத்தங்கள் கேட்டன. திரு. குரேசந் தம்பையா ஆற்றாது வெளியேறினார். ஆனால் ஒரு பதினைந்து நிமிஷம் சபையிலிருந்தவர்கள் சத்தமிட்டும், திரு. சுந்தரலிங்கம் மேடையில் ஒரு கதிரையில் உட்கார்ந்திருந்தார்.

இச் சமயத்தில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ பொன்னம்பலம், மற்றும திரு எஸ். ஜே வி. செல்வநாயகம், திரு. கே. கனகரத்தினம் ஆகியவர்கள் மேடைக்கு வெளியே இருந்து கொண்டு வரப்பட்டார்கள்.

திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம் சபையாரை வெளியே உள்ள புல் நிலத்திற்குச் செல்லும்படியும், மண்டபத்தை விட்டு அமைதியாக வெளியேறும்படியும் மன்றாடிக் கேட்டுக்கொண்டார்.

சபையிலுள்ளவர்கள் யாபேரும் அப்படியே வெளியேறினார்கள். நகர மண்டப முன்றிலில் திரு. பொன்னம்பலம் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களைப் பார்த்துச் சொன்னதாவது:-

"இன்று தமிழ் மக்கள் சார்பாகவும், தமிழக காங்கிரஸ் சார்பாகவும உங்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன்.

எங்களை வட மாகாணத் தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளெனத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். நாமோ சாவுக்கும், வாழ்வுக்கும் இடையில் யுத்தஞ் செய்கின்றோம். சமீபத்தில் இலங்கை சுதந்திர மசோதா வரவிருக்கின்றது. இதற்கு தமிழரிடையே பிளவு உண்டு என்பதைக் காட்டுவதற்காக சில யூ. என். பி. தமிழர்கள் ஒரு கூட்டத்தை இன்று கூட்டினார்கள். பிரதிநிதிகளாகிய எங்களை அந்தக் கூட்டத்திற்கு வரவேண்டாம் என்றும் கடிதம் எழுதினார்கள். அவர்கள் தங்கள் இருபது குடும்பங்களுக்குள்ள கூட்டம் என்றால் நாம ஒருவரும் இங்கு வரத் தேவையில்லை. தமிழன் ஒருவனும் வந்திருக்கமாட்டான். ஆனால் இலங்கைத் தமிழர் கூட்டம் என்றால் எல்லாத் தமிழனுக்கும் வர உரிமை உண்டல்லவா?

தலைதான் வாலை ஆட்டுவது அப்படியே வட மாகாணத் தமிழரின் விருப்பத்தை நீங்களும் நிரூபித்து விட்டீர்கள். யூ. என். பி தமிழருக்கு தமிழ் மக்களிடையே ஒருவிதமான மதிப்பும் கிடையாதென்று செய்து விட்டீர்கள்.

இன்றைக்கு இரண்டு யூ. என். பி. தமிழருக்கு சமக்கிரியை செய்துவிட்டீர்கள் ஆனால் இங்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். எங்களுக்கும் சிங்களச் சகோதரருக்கும் ஒருவிதமான கோபதாபமும் இல்லை. எமது உரிமையையே கேட்கின்றோம், தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும் - இருக்கிறார்கள் - இருப்பார்கள் என்பது எனது நம்பிக்கை.

(7-ம் பக்கம் பார்க்க)

(4-ம் கலத் தொடர்)

கண்டியில் ரோட்டரி சங்கக் கூட்டம்

ஸி எஸ். ரத்ன சபாபதி முதலியார் ஆரம்பித்து வைத்தார்

சுதந்திர இந்தியா, இலங்கையும் ரோட்டரி இயக்கமும்

கண்டி, நவ. 30

நேற்று இங்கு ரோட்டரி சங்கத்தின் டிஸ்டிரிக்ட் சபைக் கூட்டம் ஆரம்பமாயிற்று. இக் கூட்டம் இரு தினங்கள் நடைபெறும். இலங்கையிலுள்ள ரோட்டரி சபை அங்கத்தவர்களும் கோயம்புத்தூரிலுள்ள ரோட்டரி சபை அங்கத்தவர்களுமாக மொத்தம் 50 பேர்கள் வரை கூட்டத்திற்கு வந்திருந்தனர் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் இலங்கை சர்வகலா சாலைக் கட்டிட அமைப்புச் சிற்பியும் ரோட்டரி அங்கத்தவருமான திரு ஷர்லி டி அல்விஸ் சர்வ கலா சாலை அமைக்கப்படும் இடத்தை மற்ற அங்கத்தவர்களுக்குச் சுற்றிக் காட்டினார்.

அதன் பிறகு கூட்டம் காலையில் க்வீன்ஸ ஹோட்டலில் நடைபெற்றது. தென்னிந்தியாவின் பிரபல வர்த்தக, கைத்தொழில் முதலாளியும், அகில இந்திய வர்த்தகம், கைத்தொழில் சம்மேளனத்தின் மாஜித் தலைவரும், யுத்தகாலத்தில் தளவாடங்கள் சேகரித்து வந்த கிழக்குப்பகுதி ஸ்தாபனத்தின் தலைவரும், கோயம்புத்தூரில் பெரிய நெசவாலை சொந்தக்காரரும் டிஸ்டிரிக்ட் ரோட்டரி சங்க கவர்னருமான திரு ஸி எஸ். ரத்னசபாபதி முதலியார் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். இக் கூட்டத்திற்காக அவர் இந்தியாவிலிருந்து விமானத்தில் இலங்கைக்கு வந்தார் அவர் கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:—

இந்தியா அந்நிய ஆட்சியை ஒழித்து சுதந்திரமடைந்த பிறகு இந்தியாவில் டிஸ்டிரிக்ட சபையின் முதலாவது கவர்னர் பதவி வகிக்கும் அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்தது. இப்பொழுது சுதந்திர லங்காவின் முதலாவது டிஸ்டிரிக் சபைக் கூட்டத்தை ஆரம்பித்து வைக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது இலங்கையானது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள சுதந்திர நாடுகளில் ஒன்றாக ஆகிவிட்டதால் இங்கு ரோட்டரி இயக்கமும் அபிவிருத்தியடைய நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

சமூக ஊழல்கள்

ரோட்டரி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சமூகத்திற்கு எவ்வித சேவை செய்வதென்பதுபற்றி ரோட்டரி தலைவர் திரு கே எச். எப். ஜெயசூரியா விவாதத்தை ஆரம்பித்துப் பேசுகையில் பின்வருமாறு தெரிவித்தார்:—

இப்பொழுது இந்த நாட்டில் சமூகத்தில் லஞ்சமும் ஊழலும் நிறைந்திருக்கின்றன. இதைப் போக்குவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். இதற்காக ரோட்டரி சங்கம் ஓர் வாலிபர் இயக்கத்தையும் நடத்தவேண்டும்.

நான் ஓர் வைத்தியன் என்ற முறையில் ஒன்று சொல்ல விரும்புகிறேன் இலங்கையின் சுகாதாரப் பிரச்னை மிக முக்கியமானது புற்று நோயும் க்ஷயரோகமும் அதிகமிருந்து வருகின்றன. சில சுதேச வைத்தியர்கள் புற்று நோயால் பீடிக்கப்பட்ட நோயாளிகளை தவறான சிகிச்சைக் குட்படுத்தி ஆபத்தை உண்டுபண்ணுகிறார்கள். புற்று நோய் வைத்திய ஸ்தாபனங்களைத் தவிர வேறு எவரிடத்தும் இந்நோயாளிகள் சிகிச்சை பெறுவதைத் தடுக்க சட்டம் ஏற்படுத்த கிளர்ச்சி செய்ய வேண்டும்.

மகனின் நடத்தை கண்டு தந்தையார் கண்ணீர்

தமது இளம் பிராயத்தைப் பற்றி பிரதமர் பேச்சு

கொழும்பு, நவ. 30

செயின்ட் தோமாஸ் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினர் பிரதமர் சேனநாயக்காவுக்கு நேற்று மாலை காலபேஸ ஹோட்டலில் ஒரு உபசார விருந்தளித்தார்கள். திரு சேனநாயக்கா பாராட்டுகளுக்குப் பதிலளிக்கையில் தமது மாணவ வாலிபப் பருவங்களைப்பற்றிக் குறிப்பிட்டார்.

சிறு பிராயத்தில் பள்ளிக்குப் போகாது தாம் களவாணித்தனம் பண்ணியமையையும், ஆனால் கடைசியாகப் பிட்டு பள்ளிக்கூடத்தில் சட்டாம்பிள்ளை [பிறிபெக்ட] ஆக நியமிக்கப்பட்டதையும் அவர் கூறினார்.

பின்னர் பள்ளிக்கூடத்தை விட்டு உத்தியோகம் தேடித் திரிகையில அரசாங்க தொழிற்சாலையில் ஒரு பயிற்சியாளராவதற்காக மனு சமர்ப்பித்ததையும் ஆனால் அது நிராகரிக்கப்பட்டதையும் அவர் குறிப்பிட்டார். இப்பயிற்சியாளர் பதவி ஒரு தினச் சம்பளத் தொழிலாளியின் அந்தஸ்துக்கு எவ்விதமும் உயர்ந்ததல்ல.

அதன்பின் சர்வே இலாகாவில் ஒரு நிலப் படம் வரையும பயிற்சியாளராகச் சேர்ந்து வேலை செய்ய ஆசைகொண்டு முயற்சிக்கப்போய அங்கு தமக்கும் இன்னொருவருக்கும் தகராறு ஏற்படத் தாம் படிக்கட்டிலேயிருந்து அடித்து நிலத்தில் வீழ்த்தி உருட்டிவிட்ட சம்பவம் அவரால் சொல்லப்பட்டது.

இவற்றினால் தந்தையார் மனம் உடைந்தது. அவர் கண்ணீர் சொரிந்த காட்சி தமது வாழ்வைத் திருத்தி அமைத்ததாய் பிரதமர் தெரிவித்தார்.

இதன் பின் தமது தந்தையாரின் தோட்டத்தில் சாரமும் ஒரு பனியனும் அணிந்து தோட்ட வேலையில் ரூபாய் 50 சம்பளத்தில் அமர்ந்து வேலை செய்த விபரத்தைக் கூறினார். கடுமையான கண்காணியின் கீழ் அவர் அங்கு வேலை செய்யவேண்டியிருந்ததென்றும் அவர் குறிப்பிட்டார்.

மேற்குறித்த விருந்தின் போது சங்கை ஆர். எஸ. மசேரம், இ. நவரத்தினம், எச் ஏ. ஜே. ஹுலுகல்லே, வி. ஜோஸப் முதலியோரும் பேசினார்கள்.

மட்டக்களப்பு நகரசபைத் தேர்தல் முடிவுகள்

மட்டக்களப்பு, நவ. 30

மட்டக்களப்பு நகரசபைத் தேர்தல் முடிவுகள் கீழே தரப்படுகின்றன.

இரண்டாவது வட்டாரம்

ஆர் எஸ. கனகரத்ன வோட்டு	105
ஏ. தவராஜா வோட்டு	104
பழுதடைந்தவை „	4
அதிகப்படியான வோட்டு	4

மூன்றாவது வட்டாரம்

எம். சிவநேசராஜா	368
ஓ. சவரிமுத்து „	132
எஸ். டி. கனகசபை „	13
எஸ். சபஸ்டியாம்பிள்ளை	60
பழுதடைந்தவை „	15
அதிகப்படியான வோட்டு	236

நாலாவது வட்டாரம்

ஸி. டபிள்யூ. கனகசபை	211
கே. கணபதிப்பிள்ளை „	2
அதிகப்படியான வோட்டு	190

திரு. கணபதிப்பிள்ளை பழைய நகரசபை அங்கத்தினராவர்.

ஐந்தாவது வட்டாரம்

ஜே. எல. திஸவீரசிங்கம்	34
ஏ. இளையதம்பி வோட்டு	204
பழுதடைந்தவை „	10
அதிகப்படியான வோட்டு	138

இளையதம்பி பழைய நகரசபையின் உபதலைவராவர்.

ஏழாவது வட்டாரம்

ஜி சிவசுப்பிரமணியம்	214
ஏ. ஸி. பீட்டேர்ஸ	201
பழுதடைந்தவை வோட்டு	10
அதிகப்படியான வோட்டு	13

திரு. பீட்டேர்ஸ பழைய நகர சபை அங்கத்தினராவர்.

ஒன்பதாவது வட்டாரம்

எஸ. ஏ. செல்வநாயகம்	382
எம். அலோய்சியஸ	240
பழுதடைந்தவை வோட்டு	16
அதிகப்படியான வோட்டு	142

திரு. செல்வநாயகம் பழைய நகரசபை அங்கத்தினராவர்.

(நமது நிருபர்)

---

4 மந்திரிகளுக்கு வந்த கண்டம் நீங்கியது

அரசியல் சட்டத்தில் மீண்டும் ஓர் திருத்தம்

கொழும்பு, நவ 30

இலங்கை அரசியல் திட்டத்தில காணப்படும் விதிகளின் பிரகாரம் மந்திரிகள் அரசாங்க ஊழியர்களானதால் அவர்கள் தேர்தலில் கலந்துகொள்ள உரிமையற்றவர்கள் என்று வாதிக்கப்பட்டதல்லவா? இதனால் பிரதமர் சேனநாயக்கா உட்பட, நான்கு மந்திரிகளின் பதவிகளுக்கு ஆபத்து ஏற்பட்டது. பாதிக்கப்படும் இதர மந்திரிகள் டண்டாரநாயக்கா, கொத்தலாவல, ஜியார்ஜ் ஈ. டி. சில்வா என்டவர்களாகும்.

இவர்களில் பிரதமர் சேனநாயக்காமீது கொழும்பு டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டில் ஓர் வழக்கும் தொடரப்பட்டது. அவ்வழக்கில் அரசாங்க ஊழியராக இருந்தபோது தேர்தலில்கலந்ததற்காக அவர் பாராளுமன்றத்திற்கு சமுகமளிக்கும் அல்லது வோட்டளிக்கும் ஒவ்வோர் நாளுக்கும் ரூபாய் 500 அபராதம் செலுத்தவேண்டுமென்று கோரப்பட்டது.

இந்த நெருக்கடியில் இருந்து மந்திரிகள் இப்போது தப்பித்துக்கொண்டார்கள். மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் மன்னர் பிரிவிக்கவுன்ஸிலின் ஆலோசனைப் பிரகாரம், இவ்வரசியற் சட்ட சம்பந்தமாக ஓர் புதிய பிரகடனம் வெளியிட்டுள்ளார். இப் பிரகடனம் சனிக்கிழமை மாலை வெளியான ஒரு விசேஷ கெஜெட்டில் பிரசுரமாகி இருக்கிறது. இதன்படி ஜூலை 5-ம் தேதி தொடக்கமே, கடந்த ஆகஸ்டில் அரசாங்க உத்தியோகஸ்தர் விஷயமாகச் செய்யப்பட்ட திருத்தம் அமுலுக்கு வருவதால் மந்திரிகளை அது பாதிக்காது என்று தெரிகிறது.

பிரஞ்சு அரசாங்க ஆக்கிரமிப்பு

பாரிஸ், நவ 29

இந்தோசீனப் பிரதேசமான ஹாய் மூவாங் பகுதியின் [illegible] கிராமங்களைப் பிரஞ்சுத் துருப்புகள் கைப்பற்றின. தேசிய அரசாங்கத்தின் இப்பகுதித் தலைமைக் காரியாலயமும் கைப்பற்றப்பட்டது. (ராய்ட்டர்)

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை!

புதிய மதுரமான **ஆப்பிள்** பழங்கள்
கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து
இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம்
பெற்றுக்கொள்ளுங்கள்.

கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே
எங்கள் பந்தோபஸ்தான அறைகளில்
அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி
சேகரிக்கப்படுகின்றது.

ஜி. ஸி. ரேச் அன் கோ.,
மலிபான் தெரு,
போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

துயரம் கொண்டு துன்புறுதீர்கள்

வைத்தியர்களால் கைவிடப்பட்ட எமக்கு முதல் தடவை பாவித்த மட்டில் திருப்தியான சுகம் கொடுத்தது.

சிர நேத்திராஞ்சனத் தைலம்

வ. கந்தையா. C. G. R. கம்பனி சொல்வதாவது:

சிர ரோகத்தின் கஷ்டத்தால் கண்ணிலும் உபாதை ஏற்பட்டு பலவித வைத்தியங்கள் செய்தும் சுகம் பெறாது, கடைசித்தடவையாக M. K. ஜெகநாதன் கண்வைத்தியரிடமிருந்து, சிர நேத்திராஞ்சன தைலத்தை எடுப்பித்து பாவித்தமட்டில் எனது தலையிடி முதலிய வருத்தங்கள் நீங்கியதுடன் கண்ணுக்கும் பூரணசுகத்தைப்பெற்றேன். இத்தைலத்தின் அபூர்வ குணத்தின் திறமைக்கு எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ள இயலாது பேப்பர் மூலமாக இதை யாவருக்கும் பிரசித்தப் படுத்துகிறேன்.

ஒப்பம்
வ. கந்தையா C. G. R. கம்பனி.

சிர நேத்திராஞ்சனத் தைலம்

கண் புகைச்சல், குத்து, கூச்சம், மாலைக்கண், சிவப்பு முதலிய கண் சம்பந்தமான சகல ரோகங்களையும், தும்மல், நீர் வடிதல் முதலிய பீனிச வகைகளையும், கபால இடி, தலைவலி, மயக்கம், இருமல், இளைப்பு, நரம்புத் தளர்ச்சி, மூலச்சூடு ஆகிய ரோகங்களையும் நிவிர்த்தி செய்து, குளிர்ச்சியையும், ஞாபக சக்தியையும் கொடுக்கும். அஸ்மா, காசம், நீரழிவுக்கும் ஓரளவு சுகங்கொடுக்கும். காலம் நீடித்த நோயாளர்கள் நேரிலும் கடிதமூலமும் விபரம் தெரிந்துகொள்ளலாம்.

இழந்த கண்ணொளியை
திரும்பவும் ஒளிபெறச்செய்யும்
Regd. No 2036
M. K. ஜெகநாதன்
பெரிய கடை
யுநாநி கண்வைத்தியநிலையம்
யாழ்ப்பாணம்
ஏழைகளுக்கு இலவச வைத்தியம்
KNJ

விலாசம் ஆங்கிலத்தில் தெளிவாய் எழுதுக.

2 அவுன்ஸ் சீசா ரூ. 3-25

4 அவுன்ஸ் சீசா ரூ. 5-50

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

தொந்தி பெருத்தவர் இந்தியரை வரவழைத்தார்!

அவர்களை நாடு கடத்துவதும் இவர்கள்தான்:

ஏழை மக்கள் ஐக்கியத்தைப் பாழ்படுத்துவோரால் தேச மக்களுக்கு விமோசனமுண்டா

இந்தியனுக்கு ஒரு சட்டமும் மற்றவருக்கு ஒரு சட்டமும் வேண்டாம்!

சென்ற செவ்வாய்க்கிழமை வெளிவந்த "விமுக்திய" என்னும் சிங்களப் பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு:

தற்போது இலங்கையிலுள்ள சிக்கலான பிரச்னைகளில் முன்னிற்பது இந்தியப் பிரச்னையேயாகும். இதை இந்தியர் என்று குறிப்பிடாமல் அந்நியர்-அதாவது அந்நியர்-பிரச்னை என்று திருத்தப்பட வேண்டியது அத்தியாவசியமாகும். அப்பாவிகளான இந்தியத் தொழிலாளிகளை இலங்கைக்கு வரவழைத்தவர்கள், சாம்ராஜ்யத்திற்கு தூபம்போடும் திமிர்கொண்ட பணக்காரர்களே. இவர்களே தான் தம் தொந்தி கொழுத்தவுடன் இந்தியத் தொழிலாளிகளை நாடுகடத்துவதற்கு முயற்சி செய்கிறார்கள். இம்முயற்சியானது, நம் தேச-மக்கள் மீதுள்ள அபிமானத்திலல்ல. பலதரப்பட்ட சாதியத்தாரைக் கொண்ட ஏழைமக்களிடையே ஒரு அமளியை உண்டாக்கி விடுவதற்கே இந்தப் பாசாங்கு! இதெல்லாம் சதி!

1936ல் அந்நியர்களைக் கட்டுப்படுத்தும் ஒரு சட்டம் நிறைவேறியதைப்பற்றி எமக்குஞாபகமிருக்கிறது. அன்று அரசாங்கசபையில் இருந்த இடதுசாரிஅங்கத்தவர்கள் இச்சட்டத்திற்கு சாதகமாய் இருந்தார்களென்பதும் எமக்குத் தெரியும். அன்று அப்படிச் சட்டம் நிறைவேற்றப்பட்டதென்றாலும், மிகவும் குறைந்தசம்பளத்திற்கு இந்தியத் தொழிலாளர்கள் இல்லாததால் இலங்கையில் சுதேசிய-விதேசிய தனவந்தர்களுக்கு தமது சூறையாட்டத்தை நடத்திக் கொள்ளுவதற்கு வழிவகை இல்லை. எனவே தான், தம்சுயநலத்தை முன்னிட்டு மேற்படி சட்டத்தை அமுல் நடத்துவதில் அலட்சியமாய் இருந்துவிடவே, மறுபடியும் இந்தியத் தொழிலாளர்கள் ஏராளமாக இலங்கைக்கு வரத் தொடங்கினார்கள்.

இடதுசாரி அரசியல் கட்சிகளுக்கிடையே முக்கியமாக இந்தியர்களும் இருக்கிறார்கள் என்று யூ. என். பி காரர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால் யூ. என். பி. கும்பலில் எத்தனை இந்தியப் பணக்காரர்கள் இருக்கிறார்களென்பது எமக்குத்தெரியும். தேசத்தில் ஜாதிபேதத்தையுண்டாக்கி ஏழைமக்களின் ஐக்கியத்திற்கு இரட்டைத் தாழ்ப்பாளிட பிரயத்தனம் செய்யும் இந்த தோணிப் பூச்சாண்டிகளினால் தேசமக்களுக்கு உண்டாகக் கூடிய விமோசனமென்ன?

இந்தியர் மாத்திரமல்ல, எல்லா அந்நியர்களையும் கட்டுபடுத்துவதுடன் நின்று விடாமல் பூரணமாக தடைசெய்ய வேண்டுமென்பதே எமது அபிப்பிராயமாகும். ஆனால், ஏழை இந்தியத் தொழிலாளிகளுக்கு ஒரு சட்டமும், பணக்காரர்களுக்கு வேறு சட்டமும் கையாளப்படுவது, அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் சுயநலமிகளின் தொன்றுதொட்ட பழக்கமாய் இருந்து வருகிறது. இது பெரும் வெட்கக்கேடான நடவடிக்கையாகும். இவ்விஷயத்தில் எதிர் நின்று போராடும் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவை நாம் போற்றுகிறோம்.

சென்ற பொது வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதற்காக வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்குமறுபடியும் வேலை கொடுக்க வேண்டுமென்று தேசத்தில் எங்கும் பெரிய கிளர்ச்சி இருந்து வருகிறது. அந்த வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட பாபத்திற்காக, சேனநாயக்கா அரசாங்கத்தால் ஆயிரக்கணக்கானவர்கள் அனாதைகளாக்கப்பட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக அரசாங்க தொழிலாளர் சம்மேளனம் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது. சில அரசியல் கட்சிகள் வேலை நீக்கம்செய்யப்பட்ட தொழிலாளர் விஷயத்தில் அலட்சியமாய் இருக்கிறார்களெனினும், இதற்காக முன்னின்று போராடும் போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியை நாம் பாராட்டுகிறோம். கமியூனிஸ்ட் கட்சியும் ஒத்துழைப்பது வரவேற்கத்தக்கதாகும்.

பர்மாவின் சம்பூர்ண சுதந்திரம்

அரசியல்வாதிகள் சாமர்த்தியத்தால் கிடைத்தது

லங்காதீப (27-11-47) ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு:-

பர்மா சுதந்திர மசோதா, பிரிட்டிஷ் பார்லிமெண்டிலும் பிரபுக்கள் சபையிலும் சமர்ப்பிக்கப்பட்டு இரண்டாவது முறையாக நிறைவேறியது. இதனால் பர்மாவுக்கு டொமினியன் அந்தஸ்திலும் பார்க்க மேலான சுதந்திரமும் சுயாதீனமும் கிடைத்திருக்கிறது. பர்மா சுதந்திர மசோதாவைப்பற்றி புதிதாக வியாக்கியானம் பண்ண-புதிதாக பிரச்னைகளைக் கிளப்ப-புதிதாக சந்தேகப்படக்கூடிய-புரிந்துகொள்ள முடியாதபடி எதுவும் எஞ்சியிருக்கவில்லை, எல்லோருக்கும் இலகுவாக தெளிவாக புரிந்துகொள்ளக்கூடிய முறையில் ஆங்கிலத்தில் எளிய நடையில் அதில் சொல்லியிருப்பதாவது, வருகிற ஜனுவரி மாதம் 4-ம் தேதிதொடங்கி, பர்மா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தினின்றும் புறம்பான சவசம்பூரண சுயாதீன நாடாகும் என்பதேயாகும்,

தேசத்தின் பாதுகாப்பு சம்பந்தமாக மூன்று வருட கால வரையறையுள்ள ஒப்பந்தத்திற்கு இங்கிலாந்து அரசாங்கமும் பர்மா அரசாங்கமும் உடன்படிக்கை செய்துகொண்டிருக்கின்றன.

காலவரையறையில்லாத உடன்படிக்கைகளுக்கு இலங்கையை ஒப்புக்கொள்ளச் செய்து சாம்ராஜ்யத்திற்குள்ளேயே "பொறுப்பாட்சி அந்தஸ்து" பிரிட்டிஷ் பார்லிமெண்டில் வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட மசோதாவிற்கு பூரணமாக சம்மதப்பட்ட-சந்தோஷப்பட்ட-கன்சர்வேடிவ் கட்சி இந்த பர்மா சுதந்திர மசோதாவிற்கு முற்றும் எதிர்ப்பை காட்டியது பேச்சில் எதிர்ப்பைக் காட்டியதெனினும் கீழ் நாட்டு மக்கள் கோரும் சுதந்திரத்திற்கு தடை செய்ய இன்றுள்ள நிலையில் முடியாதென்றபடியால் இம்மசோதாவிற்கு எதிராக வாக்களிக்கவில்லை.

பர்மா சாம்ராஜ்யத்தினின்றும் பிரிந்து விலகிக்கொண்டபின் முன்னிலும் பார்க்க இங்கிலாந்துடன் மிகவும் அந்நியோந்யத்துடன் நம்பிக்கையோடும் நடந்து கொள்ளுமென்ற தளராத விசுவாசம் தொழில-கன்சர்வேடிவ் கட்சி அரசியல்வாதிகளின் மனப்பான்மையாகும். இதற்குக் காரணமென்னவென்றால் பர்மா அரசியல்வாதிகளின் சாமர்த்தியமேயாகும் அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டுமென்றால் கீழ்ப்படிதலிலும் பார்க்க சாமர்த்தியமே சிரேஷ்டமென்று பர்மா அரசியல்வாதிகள் நன்றாக தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையிலோ அரசியல்வாதிகள்.........?

சயாமுக்கு அனுப்பப்பட்ட இந்திய காட்சிப் பொருள்கள்

திரும்பப் பெறுவதற்கு விசேட அதிகாரி சென்றுள்ளார்

பாங்காக், நவ. 29

சயாமில் டிசம்பரில் நடக்கும் காட்சியில் வைப்பதற்கு அனுப்பப்பட்ட இந்திய காட்சிப்பொருள்களை இந்தியாவுக்குப் பத்திரமாக திருப்பியனுப்புவதற்காக இந்திய வர்த்தக இலாகாவிலிருந்து விசேட அதிகாரி ஒருவர் திரு பி கே. டணிக்கர் கல்கத்தாவிலிருந்து இங்கு வந்துள்ளார் என்று அறியப்படுகிறது. இந்த டிஸம்பர் காட்சி ரத்து செய்யப்பட்டுள்ளது, கப்பலில் அனுப்பப்பட்ட இப்பொருள்கள் மலேயாவில் பினாங்குதுறைமுகத்தில் கிடந்துள்ளனவென்று கூறப்படுகிறது.

ரூ. 80 லட்சம் மதிப்புள்ளவை

காட்சிக்கு அனுப்பப்பட்ட பொருள்கள் சுமார் 80 லட்சம் ரூபாய் மதிப்புள்ளவைகளாகும் (600,000ஸ்டெர்லிங்குகள்) ஜவுளிவகைகள் முதல் கிடைத்தற்கரிய பல பொருள்களும் இதில் அடங்கியுள்ளன. திங்கட்கிழமை திரு பணிக்கர் சிங்கப்பூருக்கு புறப்பட திட்டமிட்டுள்ளாரென்றும் அங்கிருந்து பினாங்குக்கு விமானத்தில் செல்வாரென்றும் கூறப்படுகிறது.

(ராய்ட்டர்)

வேலைநிறுத்தத்தைச் சமாளிக்க அவசரச் சட்டங்கள்

பிரெஞ்சு பாராளுமன்றத்தில் ஆலோசிக்கப்படும்

பாரிஸ, நவ. 29

இன்று பிரெஞ்சு பாராளுமன்றம் கூடுகின்றது. இக்கூட்டத்தில் பிரெஞ்சு தொழிலாளர் வேலைநிறுத்தத்தினால் ஏற்பட்டுள்ள பொருளாதார முட்டுக்கட்டைகளை நீக்குவதற்கு பிரதமர் ராபர்ட் செளமன் கொண்டுவந்த அவசரச் சட்டங்கள்பற்றி ஆலோசிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

தொழிலாளர் சங்கங்கள் திட்டமிட்டுள்ளபடி நடவடிக்கை எடுப்பின் பாரிஸிலுள்ள மக்களுக்கு காஸ, மின்சாரம், ஜலம், டெலிபோன் வசதிகள், ஆஸ்பத்திரி வேலைகள், நகரசுத்தி வேலைகள் முதலியனவெல்லாம் தடைப்பட்டுவிடுமென்றும் இந்நிலையைத் தவிர்ப்பதற்கு நேற்றிரவு மந்திரிசபை கூடி ஐந்து மணி நேரம் விஷயங்களைப்பற்றி ஆலோசித்தது. சட்டங்கள்பற்றி முடிவுசெய்துள்ளது இராணுவத்திடையே வேலைநிறுத்தத்தைக் கொண்டுவருவதுபற்றி திட்டமிடப்படவில்லையென்று அதிகாரபூர்வமாக அறியப்படுகிறது. இன்று பிரதமர் அல்லது அவரது மந்திரிகளில் ஒருவர் தேச மக்களுக்கு ரேடியோவில் பேசுவார். (ராய்ட்டர்)

நியூஸிலந்தில் பாரிசவாத நோய் பரவுகிறது

பாடசாலைகள் செவ்வாய்க்கிழமைமுதல் மூடப்படும்

வெலிங்டன், நவ 29

நியூஸிலந்து வடக்குத் தீவில் ஆக்லன்ட், டாரானுகி ஆகிய மாகாணங்களில் குழந்தைகள் பாரிசவாத நோய் பரவி வருவதுகாரணமாக இப்பகுதியில் உள்ள ஆரம்பத்திய பாடசாலைகள் எல்லாம் அடுத்த செவ்வாய்க்கிழமைமுதல் மூடப்படுமென்று ஆக்லன்ட் சுகாதார அதிகாரிகள் இன்று அறிவித்துள்ளனர்.

நோய்க்கு ஒருவர் பலி

இந்நோயினால் ஆக்லன்டில் 27 வயதான ஒருவர் இறந்துள்ளாரென்றும் 9 பேர்கள் இந்நோயால் பீடிக்கப்பட்டுள்ளனரென்றும் 7 பேர்களுக்கு இந்நோய் இருப்பதாகசந்தேகிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஞாயிற்றுக்கிழமை பாடசாலைகளுக்கும் சினிமாக்களுக்கும் போவது தடை செய்யப்பட்டுள்ளது. (ராய்ட்டர்)

கிரீஸில் பல்கேரிய குற்றச்சாட்டு

எல்லை மீறிப் புகுந்து ஆட்டு நிரை கவர்கின்றனராம்

சோபியா, நவ 27

கிரேக்க அரசாங்கம் பல்கேரியா எல்லையை மீறித் தகாதவிதமாக நடந்துகொள்வதாக ஐக்கியதேச ஸ்தாபனத்திற்கு பல்கேரிய அரசாங்கம் முறையிடும் எனத் தெரிகிறது.

கிரேக்க முடியாட்சி பாசிஸவாதிகளே இங்ஙனம் எல்லை மீறிச் செல்கின்றனர் என்றும் அவர்கள் ஆட்டு நிரைகளைக் கவர்ந்து கொண்டு போகின்றனர் என்றும் பல்கேரிய எல்லைப் பாலகர்கள் கூறுகின்றனர் [ராய்ட்டர்]

இந்திய யூனியன்-ஹைதராபாத் தற்காலிக உடன்படிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெப்ரவரி மாத முடிவுக்குள் வாபஸாக வேண்டும்.

சர்க்காரை கவிழ்க்கும் முயற்சிகளையும் பிரசாரத்தைத் தடுப்பதிலும் நிஜாம் சர்க்காருக்கு உதவிசெய்ய யூனியன் சர்க்கார் வாக்குறுதியளிக்கிறது.

டொமினியன்களிலும் அமெரிக்காவிலும் ஏஜெண்ட்-ஜெனரல்கள் நியமிக்க ஹைதராபாதத்துக்கு அதிகாரம் இருக்கிறது.

மவுண்ட் பேட்டனுக்கு நிஜாம் கடிதம்

டொமினியனுடன் சேர்வது சம்பந்தமான இறுதி ஒப்பந்தம் ஏற்படாதுபற்றி வருந்துவதாக மவுண்ட்பேட்டனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் நிஜாம் கூறியிருக்கிறாராம்.

எந்த டொமினியனிலும் சேர நான் தயாரில்லை என்பது உங்களுக்குத் தெரியும். அவ்விஷயம் தவிர வேறு எந்த அடிப்படையிலும் நான் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருந்தேன்.

அடுத்த ஒரு வருஷத்தில் பரஸ்பர ஒப்பந்தம் மூலமாக ஏற்படும் தொடர்பின் விளைவாக நீண்டகால ஒப்பந்தம் ஏற்படுமென்று நம்புகிறேன் என்று நிஜாம் அக்கடிதத்தில் கூறியுள்ளார். தமது ராஜாங்க உரிமையை இந்த ஒப்பந்தம் பாதிக்கவில்லை என்ற நிலையையும் நிஜாம் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஹைதராபாத்துக்கு யுத்த தளவாடங்களும் விசேஷமாக வெடிமருந்துகள்கிடைக்கும்படி செய்யவேண்டுமென்றும் அவைகளின் தட்டுப்பாடானது ஹைதராபாத் இராணுவபயிற்சியை பாதிக்கிறதென்றும் மவுண்ட்பேட்டனுக்கு நிஜாம் எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளார்.

ஜாதிமத பேதமின்றி தமது எல்லா பிரஜைகளின் உயிர்களும் சொத்துக்களும் இதர நலன்களும் பாதுகாக்கப்படுமென்று நிஜாம் ஒரு பிரகடனம் வெளியிடப் போவதாகவும் அக்கடிதத்தில் கூறியுள்ளார்.

நியூயார்க், நவ. 26

போலந்து விவசாயக் கட்சியைச் சேர்ந்தவரும சமீபத்தில் தேசத் துரோகியெனத் தீர்ப்பளிக்கப்பட்டதும் நாட்டை விட்டுக் கம்பி நீட்டியவருமான ஸ்டானிஸ்லா மைக்கலாஜிக் நியூயார்க்கிலுள்ள லா கார்டியா விமான நிலயத்தில் இன்று வந்திறங்கினார். அவர் இங்கிலாந்திலிருந்தே இங்கு வந்துள்ளார். (ராய்ட்டர்)

பாரத் ஸ்ரூடியோ
படம் பிடிப்பவர்கள்.
கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

எமது புதிய நிலயத் திறப்பு விழாவுக்கு வாழ்த்துக்கள் அனுப்பிய நேயர்களனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மெ. சிவசுப்பிரமணியம்
(ஐயாத்தம்பி)
புரோப்ரைட்டர்.

உங்களைப் பீடித்திருக்கும் கொடிய பிணிகளை
அகற்றிவிட்டீர்களா?

நோயை அறிந்து மருந்துண்டால் பிணி விரைவில் அகலுவது நிச்சயம். எனவே உங்களைப் பீடித்திருக்கும் பிணி என்னவென்று அறிந்தீர்களா? இல்லையானால் அதனை அறிய சிவானந்த சித்தர் வைத்தியசாலையின் பிரதம வைத்தியரும் நாடிப் பரீட்சை நிபுணரும் இலங்கையிலும், இந்தியாவிலும் ரோதெனக் கைவிடப்பட்ட வியாதிகளையெல்லாம் தீர்த்து பெரும் புகழும் கீர்த்தியும் பெற்ற வைத்திய பூபதி AYUR. Dr. V. K. S. செல்லப்பாபிள்ளை M. A., M. S. (கல்கத்தா) அவர்களைக் கண்டு உங்கள் கை நாடியைப் பரீட்சியுங்கள். அவர் உங்கள் நோயை அறிந்து தகுந்த மருந்து கொடுத்து உத்தரவாதமாய்த் தீர்த்துக் கொடுப்பார். அவர் இம்மாதம் (19-ம்தேதி) தொடக்கம் எமது கிளை வைத்தியசாலை நம்பர் 23/7 ஸ்டான்லி ரோடு, (வின்ஸர் தியேட்டருக்கு அருகாமையில்) யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து நோயாளருக்கு உத்தரவாத சிகிச்சை அளிப்பார். நோய் எதுவானாலும் சரி உத்தரவாதமாக தீர்த்துக் கொடுக்கப்படும். AYUR. Dr. இமானுவேல் ஜோஸப் L. A. M. S. அவர்களுடன் ஹெட் ஆபீஸ், 92, செட்டியார் தெரு கொழும்பில் தங்கி இருப்பார். இது சமயத்தை இழந்து விடாதீர்கள்.

சிவானந்த சித்தர் வைத்தியசாலை,
92, செட்டியார் தெரு, கொழும்பு.
கிளை: 768, லோவர் வீதி, பதுளை.
23/7, ஸ்டான்லி ரோடு, யாழ்ப்பாணம்.

கிங்ஸ்லியில்
தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங் கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்த

கன்னிகா

தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம் எஸ சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என் ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது!

கிரவுன் தியேட்டர்
ஸ்கின்னர்ஸ் ரோடு,
மருதானை.

தினசரி பிற்பகல் 2-30, மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்.

சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு

முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்

"இழந்த உறுதி"

என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்
புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது
இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்
மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும் இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது. அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கியவியாபாரிகளிடமும்
கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,
71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸ்தர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
Z. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுத்தர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவ நாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெல்ல.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 1-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது